404

# ஜகன்மோகினி

உலக நாடக மேடை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS




## அடுத்த இதழில்

மோகினி உங்களுக்கு அளிக்கப்
போகும் நல்விருந்து

1. வை. மு. கோ: 61வது நாவல் (ஆரம்பம்)
2. பி. ஸ்ரீ. "ஜகன்மோகன கோபாலன்"
3. வரகவி: 'திருக்குறள் ஸாரம்' (ஆரம்பம்)
4. எழுத்து உலகம்-ஸ்த்ரீ ரத்தினம். 2.
5. குகப்ரியை: சிறுகதை (சரித்திரம்)
6. சித்திர ரகளை:

முன்னதாகவே ஏஜண்டிடம் ஆர்டர் கொடுத்தால்தான் பிரதி கிடைக்கும்.

404 விலை அணா மூன்று

JL
N22S7
M43·202.

...ஸ்யம் ...வு) அ 2 ணா பிப்ரவரி '43 தை

வை. மு. கோதைநாயகி அம்மாள்

* வை. மு. கோ. 61-வது நாவல் *

## மதுர கீதம்

தண்ணீரிலும் கண்ணாடியிலும் நம் முகத்தைப் பார்க்கிறோம்; பார்த்து மகிழ்கிறோம். மகிழ்ந்து பூரிக்கிறோம். அதே கண்ணாடியை உடைத்து விட்டால், தண்ணீரைக் கலக்கிவிட்டால்.. முகமேது? தெளிவேது? எல்லாம் குழப்பம். எல்லாம் தடுமாற்றம்... விபரீதம்: மீண்டும்தெளிந்தால்: முன்னையைவிட அதிக பிரகாசம்......இதுதான் உலக விசித்திரத்தின் ஸாரம்...

க்ருபாவதியின் அமிருததுணத்திலும் ஆழ்ந்த தெய்வ பக்தியிலும் எதிரொலிப்பது இதுவே: க்ருபாவதி யார்? பார்வதி யார்? மதுர கீதமா !...?... கலையின் உயர்வின் அற்புதம்...யாரை யார் திரஸ்கரித்தாலும், தன்னை அண்டிய எவரையும் காத்து சிறப்பிப்பதே கலைத்தாயின் பெருமை...தொடர்ந்து படித்தால் தெரிகிறது.

மார்ச் இதழில் ஆரம்பம்.

---

# க்ஷேமலாபங்கள்

"மோகினி" அன்பர்களே!

பால் பொங்கிற்று? பொங்கல் பண்டிகையை இனிது கொண்டாடினீர்களா? நம் மோகினி மலரை பொங்கல் பரிசாக ஆப்தமானவர்களுக்கு அளித்ததாக வந்துள்ள கடிதங்களைக் காண பரம சந்தோஷமேற்படுகிறது. மோகினியின்பால் தங்களுக்குள்ள பேராவல், அளப்பரிய அன்பு முற்றும் நன்கு விளங்குகிறது. உங்கள் ஆதரவைத் தானே நம்பியிருக்கிறாள் மோகினி!

## ஒரு விண்ணப்பம்

அடுத்த இதழிலிருந்து மோகினியின் விலை உயர்த்தவேண்டிய அவசியமேற்பட்டிருப்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (4-வது, 12-வது பக்கம் பார்க்கவும்) தற்காலமுள்ள விலையில் நமக்கு அடக்க விலையே இரண்டணாவுக்கு மேலாகிறது. ரயில் அல்லது தபாற் செலவு, ஏஜண்டு கமிஷன் எல்லாவற்றையும் சமாளிக்க மூன்றணாவே போதாது. இருப்பினும் உங்களுக்கும் அதிக சிரமம் கூடாதென்று மூன்றணாவென நிர்ணயித்திருக்கிறோம். ஏஜண்டிடம் வாங்குவோர் தயவு செய்து தங்கள் பிரதிக்கு முன்னதாகவே ரிஸர்வ் செய்யும்படி கோருகிறோம். (5-வது பக்கத்தின் எதிரே "ரிஸர்வேஷன் கூபன்" இருக்கிறது)

## மலருக்கு ஏற்பட்ட மகத்துவம்

இப்போது நாம் பிரசுரித்ததைவிட இன்னும் குறைந்தது 3000 பிரதிகளாவது அச்சிட்டிருந்தோமாகில் எல்லாருக்கும் த்ருப்தி அளித்திருக்க முடியும். பேப்பர் பஞ்சம் குறுக்கே நின்றது.

வசிஷ்டர் வாக்கிலேயே "ப்ரம்மரிஷி" என்று வெளிவந்தால் எவ்வளவு விசேஷமோ, அதேபோல், மிகப் பிரஸித்திபெற்ற பெரியோர்களிடமிருந்து நம் மலரைக் குறித்து "சபாஷ்"; "பெருமைப்படத் தகுந்தவாறே இருக்கிறது"; "இஃது வைத்தமாநிதியே"; "அற்புதமாயிருக்கிறது"; "அறிஞர்கள் போற்றத் தகுந்ததே"; "an achievement, par excellence"; "brilliant issue"; "really in raptures over your performance"; "like parijataka flower" என்றெல்லாம் பாராட்டுக் கடிதங்கள் வந்துள்ளது எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது! சில கடிதங்களை நீங்களும் படித்து சந்தோஷியுங்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943



ஸ்ரீராமஜயம்.


சித்ரபானு ௵ தை௴
பிப்ரவரி 1943

மலர் 20 இதழ் 2

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

JAGANMOHINI
Estd. 1923. Vol. 20. No. 2.




பி.ஸ்ரீ

## ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்

### 9. தளர் நடை நடவானே ?

காலைகளை நன்ருகப் பதியவைத்து நடக்கத்தெரியாமல் குழந்தை தட்டித் தடுமாறி நடக்கிறதே, அப்படித் தளர் நடை நடப்பது குழந்தைக்கும் ஒரு விளையாட்டு; அதைப் பார்த்து மகிழ்வது தாயாருக்கும் ஒரு விளையாட்டு. கண்ணன் தளர் நடை நடந்ததை யசோதைத் தாய் எப்படியெல்லாம் அநுபவித்திருப்பாள்! அப்படியெல்லாம் தாமும் மனோபாவத்தால் அநுபவித்துப் பார்த்தார் தம்மை அவளாகவே பாவித்துக் கொண்ட பெரியாழ்வார். இவர், அவள் கண்ட தளர் நடையில் அவள் காணாத உட்பொருளையும் கண்டாரென்று ஊகிக்கலாம்.

### நடை பயிலும் அழகு

குழந்தைக் கண்ணன் நடக்கத் தொடங்கியதும், அரைச் சதங்கை நழுவி அடிகளிலே விழுந்து இழுப்புண்டு வருகையில் 'கிண் கிண்' என்று சப்திக்கிறது. அரையில் கட்டிய திருமணிகள், "இதோ நடக்கிறேன்! பார், பார்" என்று முரசடிப்பதுபோல் முழங்குகின்றன. நடக்கும் ஆயாசத்திலே உடம்பு வேர்த்து அந்த வேர்வைநீர் பெருகத் தொடங்குகிறது. அந்த நிலையிலும் எவ்வளவு கம்பீரமாக வருகிருன்! கட்டுத் தறியை முறித்துவிட்டுக் காலில் இட்ட சங்கிலியை இழுத்துக்கொண்டு அந்தச் சங்கிலித் தொடர் **சலார் பிலார்** என்று சப்திக்க, இருபுறத்திலும் தொங்கவிட்ட மணிகள் ஒலி செய்ய, மதயானை ஒன்று மெள்ளக்கம்பீரமாய் வருவதுபோலேவருகிருனும்.

18306

இந்தக் காட்சியைக் கண்ட யசோதையாகிய பெரியாழ்வார் பாடுகிறார்:

**தொடர்சங்கிலிகை சலார்பிலாரென்னத் தூங்குபொன் மணிஒலிப்ப,
படுமும்மதப்புனல் சோர,வாரணம் பையநின்(று) ஊர்வதுபோல்
உடன்கூடிக்கிண்கிணி ஆரவாரிப்ப, உடைமணி பறைகறங்க,
தடந்தாள்இணைகொண்டு சார்ங்கபாணி தளர்நடை நடவானோ?**

[சங்கிலிகை-சங்கிலி. தூங்கு-தொங்குகிற. புனல்-நீர். சோர-சொரிய. வாரணம்-யானை. உடை-உள்ள, கறங்க-சப்திக்க. சார்ங்கபாணி-சார்ங்கம் என்னும் வில்லைக் கையில் ஏந்தியவன். தடம்-பெரிய. தாள்-பாதம். இணை-இரண்டு.]

பெரியாழ்வாரின் தாயுள்ளமானதால், குழந்தைக் கண்ணன் குழந்தைப் பெருமாளாகவே காட்சி தருகிறான். இவனைச் சார்ங்க பாணியாகவே தரிசிக்கிறவர் குழந்தையின் சிறிய பாதங்களையும் 'தடந்தாள் இணை' என்றே மதிக்கிறார். துஷ்ட நிக்கிரகத்தின் அறிகுறியாகிய அந்தவில்லை ஒளித்து வைத்துவிட்டு இங்கே பிறந்திருக்கும் இந்தப் பிள்ளை தன்னுடைய பெரிய பாதங்களால் தளர்நடை நடக்கமாட்டானோ?—என்று பிரார்த்திக்கிறார் பெரியாழ்வார். அந்தத் தளர் நடையை இன்னும் நடக்கவேணும்; நடந்துகொண்டே இருக்கவேணும்!—என்று ஆசைப்படுகிறது ஆழ்வாரின் யசோதையுள்ளம்.

## நடையழகும் நகையழகும்

கண்ணன் தளர்நடை நடக்கும்போதே இளநகை அரும்புகிறான் அந்தப் பெருமையிலே. அந்தச் சிவந்தவாயில் அரும்பிக்கொண்டிருக்கும் வெண்மையான பற்கள் எவ்வளவு அழகாய்ப் பிரகாசிக்கின்றன,தெரியுமா? "அம்புலிமாமா எங்கே இருக்கிறான்? அம்மா" என்று கேட்ட குழந்தைக்கு, "அந்த மரக்கிளையின் நுனிக்கு மேலே அதோ இருக்கிறான்!" என்று செவ்வானத்திலே தோன்றிய பிறைச் சந்திரனைக் காட்டினாள் தாய். அதே சிறுபிறையின் முளைபோல் இலங்குகின்றனவாம், கண்ணன் சிரித்ததும் அந்தப் பல்லின் வெளிமுளைகள். அப்படிப் புன்முறுவல் செய்துகொண்டு அப்படி நடக்கவேணும்-என்றுபிரார்த்திக்கிறதுபெரியாழ்வாரின்தாயுள்ளம்.

பெரியாழ்வார் தெளிவாகப் பார்க்கிறார் குழந்தையையும், தளர் நடையையும். கண்ணனுக்குப் பீதாம்பரமாகிய ஆடை ஒன்றை இடுப்பிலே கட்டிப் பார்த்தாளாம் யசோதைப் பிராட்டி. அந்த ஆடையும் ஆபரணமுமாய், அந்தப் புன்னகையும் பொன்னகையுமாய், மின்னற்கொடியோடு நடைபயிலும் மேகம்போல் தளர்நடை நடந்துவரவேணும்; அந்த அழகை நான் பார்க்கவேணும்—என்று ஆசைப்படுகிறார் ஆழ்வார்.

விழுந்தும் எழுந்தும் நடக்கும்போது கண்ணனுடைய இளநகை சிரிப்பாகிவிடுகிறது. உமிழ்நீர் சுரந்து சுரந்துவடிய, அவன் கணகண என்று சிரித்துக்கொண்டே வந்து யசோதை முன்னே நின்று அவளுக்கு முத்தம் கொடுக்கிறான். அந்தப் பாக்கியத்தைப் பெற்ற தாயின் உள்ளம் காலமழை பெய்ததும் தளிர்க்கும் பயிர்போலத் தழைத்தோங்குகிறது. அந்த யசோதைத் தாயின் அவ்வளவு ஆனந்தத்தையும் அப்படியே கொள்ளை கொண்டு அனுபவிக்கிறார் பெரியாழ்வாரும். "அந்த நடையழகு கண்டு அன்பர்கள் மகிழ்வார்கள்; சத்துருக்களோ அந்தத்தளர் நடையின் அழகு கண்டே தளர்ந்து போவார்கள்!"—என்று உறுதி கூறுகிறார்.

குதூகலமாக இவர் கூறும் இந்த உறுதி மொழிகளைக் கேளுங்கள்:

**கன்னற்குடம் திறந்தால்ஒத்(து)ஊறி கணகண சிரித்துவந்து,
முன்வந்துநின்று முத்தம்தரும் என்முகில்வண்ணன் திருமார்வன்**

**தன்னைப்பெற்றேற்குத் தன்வாய்அமுதம் தந்(து) என்னைத் தளிர்ப்பிக்
தன்எற்றும் மாற்றலர் தலைகள்மீதே தளர்நடை நடவானே?[கின்றான்**

[கன்னல்-(இங்கே) கருப்பஞ்சாறு. முகில் வண்ணன்-மேகம்போல் வண்ணத்தை உடையவன். பெற்றேற்கு-பெற்ற எனக்கு. தன் எற்றும்-தன்னோடு எதிர்க்கிற. மாற்றலர்-சத்துருக்கள்.]

## என்ன ஆசை! என்ன கவலை!

பெரியாழ்வாரின் காட்சி இன்னும் தெளிவாகிறது. கண்ணனுடைய அண்ணனாகிய பலராமனும் அங்கே வந்துவிடுகிறான். அவன் கண்ணனைக் காட்டிலும் காலைப் பதியவைத்து நடக்கத் தெரிந்தவன்: அவனுக்கு ஓடவும் தெரியும். அந்தப் பெருமையில் அவன் தட்டித்தடுமாறி ஓடத்தொடங்குகிறான். அண்ணனைப் பிடிப்பதற்காகத் தம்பியும் தொடர்ந்து ஓட முயற்சி செய்கிறானாம். வெண்ணிறமுள்ள பலராமன் ஓடுவது, வெள்ளிமலை பெற்றெடுத்த குட்டி ஒன்று **திடுதிடு** ஒன்று ஓடுவதுபோலிருக்கிறதாம். அவனைத் தொடர்ந்து ஓடும் கண்ணன் நீலமலையின் குட்டி அடியிட்டுப் போவதை ஞாபகப்படுத்துகிறானாம். இந்த நடையழகிலே தம் உள்ளத்தைப் பறிகொடுத்த பெரியாழ்வார் இந்தக் காட்சி நிகழ்ந்துகொண்டேயிருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

ஆனால், கணந்தோறும் தன் அழகிலே புதிய புதிய அதிசயங்களைத் தோற்றுவிக்கும் கண்ணன் அந்த நடையழகிலும் எத்தனையோ புதிய புதிய ஆச்சரியங்களைக் காட்டுகிறான். நீல நிறமுள்ள சமுத்திரம்போன்ற அந்த அழகு-வெள்ளம் அப்படியே நடைபயிலும் அற்புதத்தைக் கண்டதும் பெரியாழ்வாரின் ஆனந்தமும் சமுத்திரம்போலப் பொங்கிவிடுகிறது. அந்த இன்பவெள்ளத்திலே யசோதைபோல முழுகிப்போன பெரியாழ்வாரும் அந்தத் தாயைப்போலவே, "ஐயோ! கால்வலிக்குமே பிள்ளைக்கு" என்றும் கவலைப்படுகிறார்:

**வெண்புழுதிமேல்பெய்து கொண்(டு)அளைந்ததோர் வேழத்தின் கருந்
தெண்புழுதிஆடித் திரிவிக்கிரமன் சிறுபுகர் படவியர்த்து[கன்றுபோல்**

**ஒண்போ(து)அலர் கமலச்சிறுக்கால் உறைத்(து)ஒன்றும் நோவாமே
தண்போதுகொண்ட தவிசின்மீதே தளர்நடை நடவானே ?**

[வேழம்-யானை, கன்று-குட்டி, திரிவிக்கிரமன்-மூன்று அடிகளால் உலகங்களை அளந்த பெருமான், புகர்-காந்தி, ஒண்-ஒளிபொருந்திய, போது-பொழுதிலே, அலர்-மலர்ந்த, கமலம்-தாமரை, சிறுக்கால்-சிறிய கால், உறைத்து-உறுத்த, தண் போது-குளிர்ந்த புஷ்பங்கள், தவிசு-மெத்தை.]


தளர் நடையையே பார்த்துக்கொண்டிருக்கவேணும் என்ற ஆசைக்கிடையே, குழந்தைக்கு அந்த நடையால் தளர்ச்சி ஏற்படும் என்ற கவலையும் யசோதைக்கு உண்டாவது இயல்புதான். எனவே அவள் புஷ்பங்களை விரித்து, "அப்பா கண்ணா! இனி இந்த மெத்தையின்மேலே நடக்கமாட்டாயா?" என்று கொஞ்சுகிறாள். கண்ணனும் வெண்புழுதியை மேலே பெய்துகொண்ட யானைக் குட்டிபோல், புழுதி ஆடிய மேனி வேர்த்து ஒளியுடனும் அழகுடனும் விளங்க, அந்தப் பூமெத்தைமீது நடக்கிறானாம். பெரியாழ்வாருக்கோ, "இவன் மூவுலகங்களையும் அளந்து தாவிய பாதங்களை உடையவன்; கால் உறுத்தி நோகும் என்ற கவலையே வேண்டாம்!" என்பதுதான் நன்றாகத் தெரியுமே. எனினும், பக்த மணியின் தாயுள்ளமும் யசோதையின் தாயுள்ளத்தைப்போலவே கவலை கொண்டு அந்தக் கவலையிலேயே ஆனந்தத்தையும் அடையத் தொடங்குகிறது.

ஆம்; பெரியாழ்வாரின் பேரன்பு ஸாராம்சத்தில் தாயன்புதான். தாயின் கவலைகளும் இவருக்குண்டு. ஆனால் இவரது கவலை அறிவோடும் பிரியத்தோடும் கூடிய கவலை. தொட்டிலில் ஆடும்போதே பூதனை சகடாசுரன் முதலான துஷ்டர்களை முடித்த குழந்தை நலம்பற்றி அறியாமையாலும் பிரியத்தாலும் யசோதை கவலைப்பட்டபோதிலும், இவருக்கு அப்படி என்ன கவலை இருக்கமுடியும்? கண்ணன் தளர் நடை நடக்கும் போதே, கம்ஸாதிகள் நடுங்கி ஒடுங்கியதும் இவர் அறிந்ததுதானே! எனினும் தாயின் மனோபாவம் இவரது ஞானபக்தியையும் கவர்ந்துவிடுகிறது. அன்பு அறிவுக் கண்ணைப் பொத்திக் கண்ணாம்பூச்சி விளையாடுகிறது.

கண்ணன் தளர்நடை, தட்டித்தடுமாறி நடக்கும் நமது உலக நடப்பையும் ஞாபகப்படுத்துகிறதல்லவா?

---

# அன்றும், இன்றும்.



**பேப்பர், மை, ப்ளாக், நூல், மாவு முதலியவைகளின் விலை உயர்வைப்பற்றி நீங்கள் தெரிந்துகொண்டால், மோகினியின் விலை உயர்வை சிறிதும் பொருட்படுத்தமாட்டீர்கள்.**

மூன்றணாவுக்கு விற்கப்படும் மற்ற பத்திரிகைகளில் விளம்பரங்கள், போட்டிப் பரிசுகள் நீங்கலாக படிக்கக்கூடிய விஷயங்களடங்கிய பக்கங்கள் (reading matter) சுமார் 36லிருந்து 40 வரைதானிருக்கின்றனவென்பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். இப் பேப்பர் பஞ்சகாலத்தில் ஒரு பக்கத்திற்கு ஒரு தம்பிடிவீதம் கொடுப்பது அதிகமில்லையல்லவா?

1 2 3 4 5 A B என்பது யுத்தத்திற்கு முன்னிருந்த அளவு.

1. சுமார் ரூ. 0-1-6 விற்ற பேப்பர் தற்போது ரூ. 1-8-0. கொடுத்தால் கூட நமக்கு வேண்டிய அளவு கிடைப்பதில்லை.

2. சுமார் ரூ. 0-5-0 விற்ற அச்சிடும் மை தற்போது ரூ. 1-0-0க்குகூட கிடைப்பது கஷ்டமாகிவிட்டது.

3. ப்ளாக்குகள் செய்ய முன்பு 0-1-6 ஆனால், தற்போது 0-8-0வுக்கு மேலாகிறது.

4. புத்தகம் தைக்கும் நூல் சுமார் ரூ. 0-2-6 இருந்தது இப்போது ரூ. 0-10-0க்குகூட அகப்படுவதில்லை.

5. பசை செய்வதற்கு வேண்டிய மாவு சுமார் 0-2-6 விலிருந்து ரூ. 1-1-0 ஆகிவிட்டது.

**ஆனால் மோகினியின் விலையில் ஒரு அணாதான் அதிகம்.**

## "மோகினி" ரிஸர்வேஷன் கூபன்

அடுத்த இதழ் முதல் "மோகினி" மூன்றணா வீதம் விற்கப்படுமென்ற அறிக்கையை கவனித்திருப்பீர்கள். ஏற்கெனவே 20-வதாண்டுக்காக ரூ. 1-8 சந்தா செலுத்தியவர்கள், ஜனவரி—பிப்ரவரிக்கு 4 அணா போக மீதி ரூ. 1-4 உள்ளதால் ஸெப்டம்பர் மாதத்திற்குள்ளாக 10 அணா அனுப்பவும்.

மாதாமாதம் ஏஜண்டிடம் வாங்குவோர் தாமதிக்காமல் இதன் பின்பக்கத்திலுள்ள கூபனைப் பூர்த்திசெய்து ஏஜண்டிடம் கொடுத்துவிடவும். **முன்னதாகப் பணம் கட்டவேண்டியதில்லை. ஆனால் ரிஸர்வ் செய்பவர்களுக்குத்தான் 'மோகினி' கட்டாயம் கிடைக்கும்.** மலர் விஷயமாக அசிரத்தையாக இருந்து தாமதித்தவர்களுக்கு மலர் கிடைக்காது போனது நினைவிருக்கட்டும்.

மானேஜர்.

## தங்கள் ஊர் ஏஜண்டிடம் உடனே கொடுக்கவும்

ஜகன்மோகினி ஏஜண்ட்,

.............................

நானது மார்ச்சு மாத "மோகினி" முதல்—அதாவது, வை. மு. கோ. 61-வது நாவல் "மதுரகீதம்" ஆரம்பம் முதல்—எனக்குக் கட்டாயம் ஒரு பிரதி ரிஸர்வ் செய்யவும். மாதாமாதம் மூன்றணு வீதம் நான் வாங்கிக் கொள்கிறேன்.

தேதி............1943. ....................

முழு விலாஸம்:— கையெழுத்து·

குகப்ரியை

# சஞ்சலகுமாரி

அழகுக்கு அழகுசெய்வதுபோல் அமைந்திருந்தது அந்தப் பூம்பொழில். அதையடுத்து ஒரு பளிங்கு மண்டபம், அதையும் தாண்டி உள்ளே நுழைந்தால் மிகவும் அழகிய ஒரு கூடம். அந்த கூடத்தில் ஒரே சிரிப்பும் கலகலப்பும்தான். சின்னஞ்சிறு பெண்கள், கால் தண்டைகளும், மேகலைகளும் கை வளையல்களும் ஒலிக்க ஓடிப்பிடித்து விளையாடுகிறார்கள் ஒரு புறம். மற்றொருபுறம் வேறுசில பெண்கள் முத்திழைத்த நத்துக்கள் அசைய எதையோ பேசிப் பரிகசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் எல்லோருமே நல்ல வடிவழகிகள். அவர்களுக்கிடையே ஒரு நரைத்தலைக்கிழவி. அவளைச் சூழ்ந்து இந்தப் பெண்கள் “கிழவீ, மூட்டையைப் பிரி பார்ப்போம்” என்று இழுத்துக்கொண்டிருந்தார்கள். கிழவி இவர்களைப்போல் எத்தனையோ பெண்களைக் கண்டவள். மிகவும் நயத்தோடுகூடிய குரலில், “அம்மணி! ராஜகுமாரி வரட்டும், காண்பிக்கிறேன்.” என்றாள்.

உடனே அந்தக் கும்பலிலிருந்த ஒவ்வொரு பெண்ணும், “பாட்டி! என்னை அடையாளம் தெரியவில்லையா? நான்தான் ராஜகுமாரி. நான்தான் ராஜகுமாரி” என்று கூச்சலிட்டாள். கிழவி பாவம்! இன்னது செய்வதென்று அறியாதவளாய் மூட்டையைப் பிரிக்கலானாள்.

அதே சமயத்தில் இவர்களது கூச்சலும், சிரிப்பும் ஓய்ந்தன. உயிர் பெற்ற ஓவியம்போல் ஒரு பொற்கொடி நூபுரங்கள் குலுங்க அங்கேவந்து நின்றாள். முகத்திலே இளமுறுவல். “இதென்ன பொற்பதுமை நகைப்பதுண்டா?” என்று ஆச்சர்ய மிகுதியினால் திகைத்தாள் கிழவி. ஆம்! அந்தத் தாமரை இதழ்க் கண்கள் நகைத்துக்கொண்டிருந்தன.

கிழவி பழம்பெருச்சாளி. அவளே அரசிளங்குமரி என்பது ஒரு நொடியில் விளங்கிவிட்டது. மிகவும் அன்பும் பரிவும் கலந்த குரலில் “உட்காருங்கள் அம்மணி! படங்கள் வந்திருக்கின்றன பாருங்கள்.” என்றாள்.

அவள் கொணர்ந்திருந்த சித்திரங்கள் மிகமிக விலையுயர்ந்தவை; இல்லாவிட்டால் அந்தப்புரத்திற்கே வந்துவிடுவாளா? இடமறிந்தல்லவா விற்பனை செய்யவேண்டும். **ரூபநகரம்** ராஜஸ்தானத்திற்கே திலகம். **விக்ரமஸிம்மன்** மகள் **சஞ்சலகுமாரி** அந்த நகரத்திற்கே திலகம், கிழவி அவளிடம் எதையேனும் விற்கவேணுமென்றே வந்திருக்கிறாள்.

சஞ்சலை சுபாவத்திலே துடுக்குக்காரியன்று. அன்று வியாபாரத்திலே ஏதாவது விஷமம் செய்யவேண்டுமென்று அவள் எண்ணவுமில்லை. முதன் முதலில் பாதுஷாக்களின் படங்களையெல்லாம் காண்பித்தாள். ஒவ்வொன்றிற்கும் சில பரிகாச வார்த்தைகள் மரியாதையாகக் கிடைத்தன. கடைசியில் சில படங்களே மிகுதி. ஷாஜஹான் பாதுஷாவின் படத்தை எடுத்தாள் கிழவி.

“அடாடா! இந்தத் தாடியா? இவர் நம்ப தாத்தாவாயிற்றே. இந்தத் தாடியிலே ஒருநாள் தேள் புகுந்தது. நான்தான் விளக்குமாற்றினால் அடித்தேன்.” என்றாள் ஒரு பெண்.

கிழவியின் முகம் சுண்டிற்று. இதை மறைப்பதற்காக மற்றப் பெண்கள் ஏதேதோ சொல்லிக்கொண்டே வேறு படங்களைப் பார்வையிடத் தொடங்கினார்கள். சஞ்சலை விலைபேசி ஏதோ சில படங்களை

வாங்கினுள். கிழவி ஏதோ ஒரு படத்தைமட்டும் ஒருவருக்கும் தெரியாமல் மறைத்து வைத்துக்கொண்டாள்.

"அதென்ன படம் ?" என்ருள் சஞ்சலே.

"அம்மணி! அது தங்களுக்கு அவசியமானதல்ல. பார்த்தால் பிறகு ஏன் பார்த்தோமென்று வருந்துவீர்கள்" என்ருள். சஞ்சலே விடுவதாயில்லே. கிழவியின் கண்கள் பயத்தால் மருண்டன. இந்தக் குழந்தைகள் பார்ப்பதனுலென்ன? ஆனல் விஷயம் விக்ரமஸிம்மனுக்கு எட்டினல்—என்று நினேக்க அவள் முதிய உடல் வியர்வையால் நனேந்தது.

"ஆனல் ஒரு படமும் வேண்டியதில்லே. எடுத்துப்போ" என்ருள் சஞ்சலே. மற்றப்பெண்கள் அவளேச் சூழ்ந்துகொண்டு "எடு வெளியில்" என்று கூச்சலிட்டார்கள்.

கிழவி மிகுந்த பணிவுடன், "அம்மணி! அந்தப்படம் தங்கள் 'குலசத்ரு' **ராணு ராஜஸிம்மனு**டையது. படத்தைக் கையில் எடுத்தாள் சஞ்சலே. ஆச்சர்ய மிகுதியினுல் அவள் கண்கள் மலர்ந்தன. 'இன்னெுன்று யார்?' என்ருள் அவள்.

"ஓ! அதுவா? மிகப் பெரியவீரர். **அலங்கீர்பாதுஷா**" என்ருள்.

"அடாடா! **ராணு ராஜஸிம்ஹனே**விட மிகப் பெரிய வீரனே? என்ருள் சஞ்சலே. அவள் குரலில் ஏளனம் தொனித்தது. "அடி பழிகாரி! இந்த பாபியையா வீரன் என்ருய்" என்று முணமுணத்தாள் அவள். விற்பனே முடிந்தது. கிழவி புறப்பட்டாள்.

சஞ்சலேயின் மனதில் ஒரு வேடிக்கையான எண்ணம். தோழிகளேக் கூப்பிட்டாள். இவர்களது பரிகாசப் பேச்சிலும் அழகிலும் ஈடுபட்ட அந்தக்கிழவி சற்றே நின்ருள். "பிரணயினி! இந்தப் படத்தை நடுவில் வைக்கிறேன். எவள் வந்து முதலில் இதைக் காலால் உதைக்கிருளோ அவளுக்கு இந்த முத்துமாலே" என்ருள் சஞ்சலே.

கிழவி கீழே வைக்கப்பட்ட படம் யாருடையதென்று பார்க்க முடியாதவளாய்த் தவித்தாள். அவள் நெஞ்சும் மார்பும் படபடவென்று அடித்துக்கொண்டது.

சஞ்சலே மீண்டும் கம்பீரமான குரலில், "அடி அசடுகளே! உங்களில் யாருக்கும் தைரியமில்லேயா? எவளுடைய உதையினுல் படத்திலிருப்பவனுடைய மூக்கு உடைகிறதோ—என்பதற்குள், நிர்மலே என்ற தோழி அவள் வாயைப் பொத்தி "என்ன? சஞ்சலா! வரவர உனக்கு இப்படி புத்திபோகிறது!" என்பதற்குள் சஞ்சலே ஒரே தாவலாய்த்தாவி அந்தப் படத்தின்மேல் தன் கால்களே வைத்தழுத்தினுள். அப்பொழுதே வாங்கிய விலேபெற்ற அந்தப்படம் அப்படியேசடசடவென்று நொறுங்கிப்போயிற்று.

கிழவி திகைத்துப்போய் அங்கேயே நின்றுவிட்டாள். தோழிப் பெண்கள் சஞ்சலேயின் இந்த அசட்டுந் துணிச்சலேக் கண்டு கல்லாய்ச் சமைந்துபோனுர்கள். அப்பொழுதும் கிழவிக்கு "படம் யாருடையது?" என்ற கேள்விதான். நிர்மலே – கிழவி இருக்கிருளென்பதையும் மறந்து "அடிபாவி! என்னசெய்துவிட்டாயடீ, உன் தகப்பனுருக்குத் தெரிந்தாலே ஆபத்து. போதாக்குறைக்கு ஔரங்கஜேப்பின் காதுகளுக்கு எட்டிற்ருே நாளேக்கு ரூபநகரந்துக் கோட்டையிலே ஒருகல்கூட பாக்கியிராதே" என்று உரத்த குரலில் கூவிவிட்டாள்.

அப்பொழுதும் சஞ்சலே சும்மாயிருக்கவில்லே. "குழந்தைகள் பொம்மையைவைத்து விளேயாடி ஆசையைத் தீர்த்துக்கொள்ளுவதுபோல நானும் என் ஆசையைத் தீர்த்துக்கொண்டேன். இதேமாதிரி பாதுஷா

லையே ஒருநாள்— என்பதற்குள் பிரணயினி அவள் வாயைப் பொத்திவிட்டாள்.

கிழவிக்கு விஷயம் விளங்கிவிட்டது. நிர்மலேதான் அங்கிருந்தவர்களுள் மூத்தவள். கிழவியின் கையில் நான்கு மோகராக்களைவைத்து மூடினுள். அல்லாவின் பெயரில் ஆணையிடும்படி வேண்டினுள். கிழவி ஆணையிட்டாள். பேதை நிர்மலே பளுவு குறைந்ததுபோல் பெருமூச்சு விட்டாள்.

அந்த நாளிலே மொகல்மன்னரது ஆட்சியில், காசும் பெருதவைகளெல்லாம் பொன்பெற்றன. வேவுகாரர்கள் அங்கங்கே விஷயங்களேச் சேகரித்து இஷ்டம்போல் பொய்யும் புனேந்துரையும் கற்பித்து விற்பனைசெய்து விடுவார்கள். இவர்கள் உண்மையான ஒற்றர்களன்று. பழம் விற்பவர், படங்கள் விற்பவர், அத்தர் விற்பவர்கள் முதலியவர்கள்தான். மொகல் சாம்ராஜ்யத்திலே நடந்த பல அட்டூழியங்களுக்கெல்லாம் காரணம் இத்தகைய கோட்சொல்விகள்தான். இவைகள் பெரும்பாலும் புருஷர்கள் மூலம் வருவதில்லே. கோள்களுக்குத் தக்கப்டி விலே மதிக்கப்பட்டு அந்தப்புரங்களுக்கே முதலில் செல்லும்.

சஞ்சலேயின் இந்த விளேயாட்டைக் கிழவி எத்தனே நாட்கள்தான் பொறுப்பாள். நாட்கள் செல்லச்செல்ல ஆணேயின் வேகமும் பயமும் குறைந்துபோயிற்று. படிப்படியாய் பல கைகள் மாறி விஷயம் ஔரங்கஜேப்பின் அருமைப்புதல்வி ஜெபுன்னிஸாவின் செவிகளுட் புகுந்தது. அவளும் சமயம் பார்த்து வத்திவைக்கவேண்டுமென்று காத்திருந்தாள்.

* * * *

அன்று வஸந்த பஞ்சமி. ஜெபுன்னிஸா மிகவும் அழகாய் அலங்கரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அன்று ஏனே அவள் மனம் ஒன்றிலும் செல்லவில்லே. மீண்டும் மீண்டும் சஞ்சலேயின் இந்தச்செயல் அவள் மனக் கண்களின்முன் தோன்றிக்கொண்டே இருந்தது. "சஞ்சலே! என்ன அழகான பெயர். என்ன தைரியம் அந்தப் பெண்ணுக்கு! உண்மையில் அவளேத் தட்டிக்கொடுக்கத்தான் வேண்டும். இந்துப் பெண்களுக்கே அசட்டுத் தைரியம். இதிலும் இந்த ரஜபுத்ரப்பெண்கள் ராக்ஷஸிகள். சிரித்துக்கொண்டே நெருப்பில் இறங்குகிருர்களே! என்ன தைர்யம்! அடடா! ரஜபுத்ர வீரர்களிலே சிறந்தவர்களேப் பார்த்திருக்கிறேன். அந்த குள்ள மகாராஷ்ட்ர வீரன் தலேவணங்கா மன்னன் அவனேயும் பார்த்திருக்கிறேன். ஆனல் நம்மைப்போன்ற ஒரு சின்னஞ் சிறுபெண், என்ன துணிவு? என்ன சாகஸம்! அவளே ஒருநாள் நமக்கு வெற்றிலேமடித்துக்கொடுக்கச் சொல்லவேணும். சமயம்பார்த்து அவளேச் சிறைபிடித்து வந்தால்தான் நலம்" என்று எண்ணினுள் அவள்.

மறு விநாடி உள்ளே நுழைந்தான் அலங்கீர் பாதுஷா. தந்தையும் மகளும் நெடுநேரம் பேசினுர்கள். சூர்ப்பனகை ராவணனிடம் சீதையின் ஸௌந்தர்யத்தை வர்ணித்ததைவிட தன் கவிதாசக்தி முழுவதையும் உபயோகித்து வர்ணிக்கத்தொடங்கினுள் அவள். கடைசியாக ரூபநகரத்துக்குக் கடிதம் எழுதுவதாக எழுந்தான் பாதுஷா. விஷயமென்ன?

"உன் மகளே எனக்கு விவாகம் செய்துகொடு அல்லது போருக்குப் புறப்படு"

* * * *

ரூபநகரத்து அரண்மனேயில் ஒரே அமளிகுமளி. பாதுஷாவின் கடிதம் வந்த உடனே சிறினன் விக்ரமன். சஞ்சலேயை டெல்லிக்கு அனுப்புவதென்ற முடிவு. பேதை சஞ்சலே என்ன செய்வாள்? சிறு பொறி பெருந்

தீயாகிவிட்டது. ஆனால், ஒரே சிறு நம்பிக்கை அவள் நெஞ்சிலே வேரூன்றி நின்றது. ஆனால்—அவர் நம்குல சத்ருவாயிற்றே உதவிக்கு வருவாரா? என்னைமட்டுமாவது அங்கிகரிப்பாரா வென்றெல்லாம் சிந்தனை சுழன்றது. கடைசியில் ராணா ராஜஸிம்மனுக்கு ஒரு கடிதம் எழுதத் துணிந்தாள். வேறு வழியில்லை. தான்வைத்த தீயைத்தானேதான் அணைக்கவேணும்; சிறுபொறி பெருந்தீயாகிவிட்டது. அன்றுதான் டில்லிக்குப் புறப்பட வேண்டும். சஞ்சலை மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டாள். விக்ரமன் மிகுந்த பெருமிதத்தோடு கட்டளையிட்டுக் கொண்டிருந்தான், இரண்டு மூடு பல்லக்குகள் தகுந்த பாதுகாப்புடன் டெல்லியை நோக்கிப் புறப்பட்டன.

*　　*　　*　　*

நடுநிசி. கன்னங்கரிய இருள். வானத்திலே தாரகைப் பெண்கள் கண்சிமிட்டித் தம்முள் இரகசியம் பேசின. அந்த நள்ளிரவிலே ஊரே உறங்கிக் கிடந்தது. ஒரே அமைதி. அறையில் மங்கலான ஒரு விளக்கு மட்டும் சுடர்களை உதிர்த்தவண்ணம் எரிந்துகொண்டிருந்தது, ஊதுவத்தியி லின்று எழுந்த புகைக்கூட்டம் அவ்வறைமுழுவதும் பனிபோல் சூழ்ந்து நின்றது. மிகவும் உயர்ந்த ஒரு கட்டில், அழகிய விதானங்களும் விரிப்பு களும் அறையை அலங்கரித்தன. அந்தக் கட்டிலில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தான் ராஜஸிம்மன், அவன் சிந்தனை நெடுந்தூரம் சென் றிருந்தது. சஞ்சலை தனக்கு உதவி வேண்டுமென்று விடுத்த கடிதமும், அதன்பின் படிப்படியாய் நேர்ந்த பல சம்பவங்களும், தான் மொகலாயரை எதிர்க்கச் சேனைகளை அனுப்பியதும் கணவாயின் இருபுறத்திலும் சென்று தாக்கித் தன் சேனைகள் வெற்றி பெற்றதும் ஒவ்வொன்றாய் இறகு முளைத்து எதிரே வந்து நின்றன. "வெற்றி பெற்ற செய்தி வந்துவிட்டது. ஆனால் அந்தப் பெண் என்னவானாள்... அடாடா! அவள் கடிதத்திலேதான் என்ன விநயம்! என்ன பணிவு! பழைய பகைமையை மறந்து அவளை ஆட்கொள்ளவேணுமாம்! என்ன சாதுர்யம். ஆம்! அவள் பேச்சே வெகு வேடிக்கையாய்த்தானிருக்குமாம். சித்திர விற்பனை நடந்த அன்று அவள் பேசிய வார்த்தைகள், என் மனதையே கொள்ளைகொண்டதில் ஆச்சர்ய மென்ன ? அவள் தோழி என் படத்தைப் பார்த்து, "அடி அசடே! உங்கள் குலசத்ரு, வயது நாற்பத்தைந்து, அதிலும் மலைமலையாய் மூன்றுபிள்ளைகள்; ராணி பிரபாவதி தேவியும் இருக்கிறார்; அவரோடு உனக்குப் போட்டியா ?" என்றபொழுது இந்தப் பெண் சொன்ன வார்த்தைகள் கேட்கக் கேட்க அமுதமாகவல்லவா தோன்றுகின்றன என்ன அருமையான சொற்கள். 'ரஜபுத்ரருக்கு அழகு, வயதும் ரூபமும்தானா ? "வீரனுக்கு வீரமே சௌந் தர்யம்" என்றுளாம். அவளல்லவா வீரை. நத்தை வயிற்றிலே முத்துப் பிறந்ததுபோலல்லவா அந்தப் பேடி விக்ரமன் - மொகல் சம்பந்தத்தை மிகப் பெரிய கௌரவமென்று நினைப்பவன் - வயிற்றில் பிறந்தாள்" என் றெண்ணியவனாய் மீண்டும் அவளது கடிதத்தை எடுத்தான்.

*　　*　　*　　*　　*

இரவின் இரண்டாம் சாமம். அடர்ந்த காட்டின் மரங்களின் உச்சியி லிருந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான் சந்திரன், அவனது வரு கைக்குப் பயந்த இருள் கூட்டம் அந்த அடர்ந்த மரங்களின் இலைகளைத் தேடி ஒளிந்துகொண்டிருந்தன. சற்று நேரத்திற்கொருமுறை 'சலசல' வென்று அலையடிக்கும். மீண்டும் ஒரே அமைதி.

நிசப்தமான அந்த அரண்யத்திலே "டடடக் டடக்" என்ற குளம் போசை சருகுகளின் ஓசையினிடையே கேட்டது. பறவை கீச்சிடுவது

போன்ற ஒரு சப்தம். மறு விநாடி "ஜய் ஏகலிங்கா! என்ற குரல் மிகவும் மிருதுவாகக் கேட்டது. இடையிலே வாள் தரித்த வீரன் ஒருவன் எங்கிருந்தோ வந்து வணங்கி நின்றான், குதிரையின்மேலிருந்து குதித்தான் வந்தவன். வந்தவன் யாரென்பதைச் சொல்லவேண்டியதில்லை. அந்த நள்ளிரவில் ராணாவைத் தவிர வேறு யார் இவ்வளவு தைரியமாய் வரக் கூடும் ? மற்றவன் யார் ? வீரர்களுள் சிறந்தவன் என்று ராஜ ஸ்தானம் முழுதும் புகழும் ரணஜித்ஸிம்மன். யாராயிருந்தாலென்ன ?

இருவரும் மிகவும் தணிந்த குரலில் நெடுநேரம் பேசினார்கள். விஷய மென்ன ? "ரூபநகரத்துச் சௌந்தர்யக்கொடி கணவாயிலே பல்லக்கி லிருந்து தப்பி எங்கேயோ மாயமாய் மறைந்துபோனாள். உதயப்பூரை அடைந்திருக்கலாம். அல்லது இந்த வழியிலேதான் எங்கேயாவது வந்து கொண்டிருக்கலாம். அவளுக்குப் பாதுகாப்பாகவந்த மொகல் சேனை கணவாயில் பொறியில் அகப்பட்ட எலிபோல் அகப்பட்டுவிட்டார்கள்" என்பதுதான்.

ராணாவின் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்ததை அந்த நிலவொளி யிலேகண்டான் அவன். அன்று கிடைத்த வெற்றியின் பெருமிதம் முகத்திலே தோன்ற, "அரசே! தாங்கள் முன்னேக்கிச் செல்வதானால் இன் றைய "குழூக்குறி" சஞ்சலகுமாரி" என்றான். ராணாவின் முகத்தில் இள முறுவல் அரும்பிற்று. ஆச்சர்ய மிகுதியினால் அவன் கண்கள் ஜ்வலித்தன.

"ஜய்! ஏகலிங்க !" என்ற வார்த்தைகள். அரங்க மேடையிற் தோன்றி மறையும் நடிகன்போல் எங்கேயோ மறைந்துபோனான் ரணஜித்ஸிம்மன்.

இரவின் இரண்டாம் சாமம் முடிந்து மூன்றும் சாமமும் வந்தது. நிலவின் அழகிலே ஈடுபட்ட சிற்சில பறவைமட்டும் இன்னிசை எழுப்பி வான வீதியிலே பறந்து சென்றன. எங்கிருந்தோ கேட்கின்ற குதிரையின் குளம்பின் ஒலி அந்த அமைதியிலே தெளிவாய்க் கேட்டது,

ராணா நாற்புறமும் பார்த்தவனாய்ச் சிந்தையில் ஆழ்ந்திருந்தான். எவ்வளவு நேரம் அப்படி நின்றிருந்தானே தெரியாது. ஒரு வெண்மையான குதிரை அவன் நின்றிருந்த அந்த இடத்திற்கே வந்து நின்றது. அதிலிருந்து குதித்தான் ஒரு இளைஞன். குதிரை கனைத்து வாயிலிருந்து நுரையைக் 'கக்கி' நின்றது. திடுக்கிட்டான் ராணா, "யாரது ?" என்ற சொற்கள் மிகுந்த கம்பீரத்தோடும் அதிகாரத்தோடும் எழுந்தன.

"ஜய்! ஏகலிங்க !" என்ற வார்த்தைகள் அவன் செவிகளுள் விழவே அவன் திகைப்பு பின்னும் அதிகமாயிற்று.

"அந்தக் குரலிலேதான் என்ன இனிமை. என்ன மென்மை" என்று தயங்கினான்.

"குழூக்குறி ?" என்று கேட்டவனாய் அவன் கைகளைப் பற்றும் பொருட்டு தன் கைகளை நீட்டியவனாய் நெருங்கினான். இளைஞன் இரண்டடி பின்னடைந்தான்.

"குழூக்குறியா ? சஞ்சலகுமாரி" என்ற வார்த்தைகள் அமுதிலே தோய்ந்து எழுந்தவைபோல் அவன் இதயத்தே கேட்டன. ஒரு மின்னொளி அவன் முகத்திலே தோன்றி மறைந்தது.

"என்ன ? சஞ்சலையா ?" என்றான். ஆச்சர்ய மிகுதியினால் அவன் கண்கள் விரிந்தன.

"அடியாள் தங்கள் பரம சத்ருவின் மகள் சஞ்சலைதான்" என்ற தொடர் உடைந்த சொற்களாய் அவள் வாயினின்றும் எழுந்தன.

அந்த நிலவொளியிலே அவளது பேரெழிலைப்பருகியவனாய் அந்த வேஷதாரியைப் பார்த்து நின்றான் ராணா ராஜஸிம்மன்.

ஸ்ரீ. ஜானம்மாள்

# என்னே! இவ்வுலகம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆட்களுக்கு சோம்பலுக்கிடம் கொடுத்துவிட்டு நம்மையும் இகழ்ச் சிக்குள்ளாக்குவதில் என்ன பெருமை? ஆட்களை பம்பரம்போல் ஆட்டி வைத்துக்கொள்வதுதான் நமக்கு அழகு'' என்று பத்மா ஒரு சிறிய பிரசங் கத்தைச் செய்தாள்.

''நீங்கள் கூறுவது மிகவும் சரி. ஆனால் நமது பாரதியாரின் அருமை யான பாடல்களைப் படித்திருக்கின்றீர்களா! என்றுதான் நான் கேட்கிறேன். அவர் பாட்டில் "ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில் மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே'' என்று வற்புறுத்துகிறார். எல்லோரும் இதைத் தெரிந்துகொள்ளவேண்டும்'' என்றாள் சாவித்திரி. "ஊஹூம்; அக்கொள்கையை நான் ஒப்புக்கொள்ளவேமாட்டேன். ஒன்று ஒன்று என்று முழங்கிக்கொண்டு வருகிறார்கள். உலகில் இது சர்வசாதா ரணமாகிவிட்டது. பத்மா! உன் அபிப்ராயம் என்ன?'' என்று கிச்சு வினவினான்.

'கிச்சு! இது ரொம்ப வாஸ்தவமான பேச்சு. இவ்வாறு "சமம், சமம்'' என்று கூக்குரல் போடுவதின் காரணத்தினால்தான் எதற்கெடுத்தாலும் வாதம் பிடிவாதம் முதலியவைகள் மனிதரிடத்தில் தலைவிரித்தாடுகிறது. எப்படி உயர்வு தாழ்வு என்பது இல்லாமல் போய்விடும்?' என்றாள் பத்மா.

"உயர்வும் தாழ்வும் குணத்தில் இருப்பது உண்மை. நீங்கள் எண்ணு வதைப்போல வேலைகளிலும் தொழில்களிலும் அதைக் காணமுடியாது. கல்வியை எட்டுச்சுரக்காயாக அடித்து பொதுஅறிவு (General know-ledge) சூனியமாகப் போய்க்கொண்டு வருவதைப் பார்த்தால்தான் மனதிற்கு சங்கடம் ஏற்படுகிறது. வேலையென்பது உலகத்தின் பொது உடைமை. தம் கையைக்கொண்டு உழைக்கும் மனிதர்களைப் பார்த்து கொண்டாடி, அவர்களைநாம் புகழவேண்டும். இகழ்வதுமதியீனம் அடிமையை அகற்றி சுதந்திரத்தை அளிக்கும் அரிய சாதனம் அது, திருவேங்கடம் நமது அடிமையல்ல யென்பதை உணரவேண்டும்'' என்றாள் சாவித்திரி.

"கல்லூரி படிப்பில்லாமலே இவ்வளவு உயர்ந்த லக்ஷியத்தைக் கூறு வதற்கு உங்களது அம்மாவுக்கு சக்தி யிருக்கிறது பார்த்தீர்களா? அடே கிச்சு! அடுத்தாத்து அம்மாமி நமது வீட்டு மரத்திலிருக்கும் கிளைகள் தங்கள் வீட்டின் எல்லைக்குள் வளர்ந்திருக்கின்றன என்று என்னை ரொம்ப கோபித் துக்கொண்டாள்'' என்றான் ஜெகன்னாதன்.

'அவ்வளவு துணிச்சல் வந்துவிட்டதா, உன்னைப்பார்த்தா திட்டினாள்? இதோ இப்பொழுதே சென்று நான் அவளுக்குப் பாடத்தைக் கற்பித்து வருகிறேன்' என்று கிச்சு துடித்தான்.

'வழிக்கு வந்தாயா? உன் அப்பாவைமட்டும் ஒருவரும்மிரட்டக்கூடாது என்றால் நீ மட்டும் நமது ஆளை அதட்டி மிரட்டி வேலை வாங்கலாம்போலும் நல்ல நியாயம்! மேல்நாட்டினர் முதன்முதல் தொழிலுக்கு வந்தனமளிப்பார். அதைதான் கொண்டாடி கௌரவிப்பர். மேலும் அவ்வர்த்தக வழியினால் நம் நாட்டைக் கைப்பற்றியது உலகம் அறிந்த விஷயமல்லவா. கைத்தொழில் இல்லா ஊரில் தொல்லைகள் அதிகம்' என்றாள் சாவித்திரி.

'அம்மா! எப்படியிருப்பினும் படித்தவரும் படியாதமூடமும் ஒன்ருக இருக்க முடியாது. குச்சுவீடும் மெத்தைவீடும் ஒன்ருகப்போகுமா?' என்ருள் பத்மா.

'கோதாவரிக் கரையில் இருக்கும் வண்டல் பூமியில் சரியான விதையை நடாவிட்டால் என்ன ஆகும் தெரியுமா? அது கொழுத்து படர்ந்து எல்லா இடங்களேயும் தன் வசமாக்கிக்கொண்டு இதர புல் பூண்டுகளுக்கும் இடமளிக்காது, தானும் பலனைத்தராது, அதையொத்ததுதான் உங்களது காலேஜின் படிப்பும்' என்ருள் சாவித்திரி.

"சாவித்திரி! நீ சிக்கலான கேள்வியைக் கேட்டுவிட்டாய். நான் ஒரு சுலபமான கேள்வியைக் கேட்கிறேன். கிச்சு! டிரைவர் காரை வேகமாக ஓட்டிக்கொண்டு போகும்போது குறுக்காக ஒருவர் ஓடிவந்தால் என்ன செய்வது?" என்று கேட்டான் ஜெகன்னுதன்.

"என்ன செய்வதா? அவனைத் திட்டி நொருக்கவேண்டியதுதான். அந்த தடியன் காரின் நடுவில் அகப்பட்டுக்கொண்டு உயிர் துறந்தால் போலீஸுக்கு எவன் போவான்?" என்று பதில் அளித்தான் கிச்சு.

"மரணத்திற்குப் பின் திட்டி பயன் என்ன? டிரைவர்தான் காரை ஜாக்கிரதையாக ஓட்டவேணும்" என்று மொழிந்தாள் பத்மா.

அம்மா சொல்வதும் அதுவேதான். கல்விக்கு லக்ஷணம் அறியாமையைப் போக்கி எல்லோரையும் சம திருஷ்டியுடன் பார்க்கவேண்டும். மேலும் நான் உங்களுக்கு உரைக்கிறேன். தாய் தந்தையர் இல்லையாகில் குடும்பம் இல்லை. ராஜா, பிரஜைகள் இல்லாவிடில் ராஜ்யமில்லை. ஸ்திரி, புருஷர் இல்லாவிட்டால் உலகமேகிடையாது. அவைகள்போலவேதான் அறிவின் ஆற்றலும் சரீரஉழைப்பும் இல்லாவிட்டால் விவகாரம் ஒன்றுமே நடைபெருது. பலமுள்ளவன்தான் தாழ்ந்துபோகவேண்டும்!" என்ருர் ஜெகன்னுதன்.

'மேலும்சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். பிறருடைய துன்பங்களை நீக்கி அவர்களின்மீது அன்பு கொள்வதுதான் படிப்பின் லக்ஷணம். கேவலம் கணக்கில்லாத புக்தகங்களை பாணுபூச்சி அரிப்பது போல் படித்தால்மட்டும் போதாது. கடைசியில் அவ் வுழைப்பு மனிதனின் சுவாசப்பையை அரித்து அதுவே ம்ருத்யுவாக மாறுகிறது. காலத்திற்குத் தக்க காரியங்களை ஒழுங்காகச் செய்யும் முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும். எடுத்த காரியத்தை சலைக்கா வெற்றியுடன் முடிப்பதற்கு சக்தியிருக்கவேண்டும். பலவித கைத்தொழில்களை உலகில் பரவச்செய்யவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தை அடியோடு ஒழிக்கவேண்டும் ஒற்றுமையை உலகில் நிலைநாட்டவேண்டும்" என்று சாவித்திரி உபதேசித்தாள்.

'அம்மாவை இன்று சரஸ்வதிதேவி பிடித்து ஆட்டுகிருள். அதனுல்தான் கிடுகிடுவென்று Lecture செய்துகொண்டு போகிருள்' என்ருள் பத்மா.

"அப்பா அம்மா சொன்ன பிறகுதான் உலகில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பது தெரியவருகிறது" என்ருன் கிச்சு.

'ஆமாம். உலகமே பொல்லாது என்றுகூட ஏற்படுகிறது' என்ருள் பத்மா

"வாஸ்தவம். உலகமே சுழல்கிறது" என்ருன் திருவேங்கிடம். "சம்சாரமே கிரகச்சாரம்" என்ருன் ஜெகந்நாதன்.

"எல்லாம் மனப்பிராந்திதான்" என்ருள் சாவித்திரி.

"இனி நானும் கிச்சுவும் எங்களது வேலைகளை நாங்களே செய்து கொள்ளுவதென்று தீர்மானம் செய்துவிட்டோம்" என்ருள் பத்மா.

"ஆமாம் ஆமாம்" என்று ஒத்துப்பேசினுன் கிச்சுவும்.

'சங்கு கொண்டே வெற்றி ஊதுவோம், இதை தாணிக்கெல்லாம் எடுத்தோதுவோம்! பாரத மாதாவுக்கு ஜே!' என்ருன் திருவேங்கிடம்.

# மோகினி அன்பர்களுக்கு

கிராமத்தில் புஷ்பித்த மோகினி மலரைக் குறித்தும், பொங்கல் பண்டிகையைக் குறித்தும் நேயர்கள் அன்புடன் அனுப்பிய வாழ்த்துக்களுக்கு எம் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு எல்லோருக்கும் சர்வமங்களத்தை அருளும்படி எம்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

நிற்க, மோகினி விஷயமாய், சென்ற மாதத்தைப்பற்றிய குறிப்பு ஒன்றும், வருகிற மாதத்தைக் குறித்த அறிவிப்பு ஒன்றும் நேயர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

## சென்ற மாதம்

மோகினி மலரின் அச்சுவேலை 31-12-42 அன்றுதான் முடிந்தது. அதற்குக் காரணம் நாங்கள் நிருவிய திட்டத்தைவிடக் கட்டுரைகள் அதிக பக்கங்கள் வளர்ந்துவிட்டதுதான். 1-1-43 முதல் தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக 10-1-43 வரை எல்லோருக்கும் அனுப்பினோம். மலருக்கும் புதுவருட சந்தாவுக்கும் சேர்த்து ஒரே சமயத்தில் அனுப்பியவர்களுக்கு மலரும், ஜனவரி இதழும் ஒன்ருகவும், இரண்டுக்கும் வெவ்வேறு சமயங்களில் பணம் அனுப்பியவர்களுக்கு மலர் முதலிலும், ஜனவரி இதழ் பிறகும் அனுப்பினோம். மலர் உள்ள பேகட் ஒவ்வொன்றுக்கும் தபாலாபீஸில் ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங் வாங்கிதான் அனுப்பினோம்.

தாமதித்துப் பணம் அனுப்பிய சந்தா நேயர்கள், ஏஜண்டுகள் எல்லோருக்கும் த்ருப்தியளிக்க இயலவில்லை. டிஸம்பர் இதழில் "தாமதித்தால் மலர் கிடைக்காது" என்று வெளியிட்டிருந்ததால், 10-12-42க்குள்ளாகவே மலர் முற்றும் பதிவாகிவிட்டது. 10-12-42 முதல் 26-12-42 வரை கிடைத்த சந்தா நேயர்களின் ஆர்டர்களுக்காக, ஏஜண்டுகளின் டிஸம்பர் ஆர்டர்களைக் கட்டுப்படுத்தி மிகவும் குறைத்து அனுப்ப நேர்ந்தது. 26-12-42 க்குப்பின் கிடைத்த ஆர்டர்களுக்கு மலர் இல்லாததால் க்ருபா மந்திர் (ரூ. 1/.)ஒரு பிரதியும், 4 அணு நாவல் ஒன்றும் ஷை நேயர்களின் அனுமதிபேரில் அனுப்பினோம். காகிதப் பஞ்சத்தின் தாண்டவம் இது.

நேயர்களில் தாமதித்தவர்களுக்கு மலர் கிடைக்காது போனதற்கும் மற்றவர்களுக்கு மலர் சிறிது தாமதித்து கிடைத்ததற்கும் அவரவர்களின் மன்னிப்பைக் கோருகிறோம். மலருக்கு ஏற்பட்ட மகத்துவத்தைப்பற்றி உள்ளட்டையில் படிக்கவும்.

## அடுத்த மாதம்

அடுத்த இதழ் முதல் மோகினியின் விலையும், சந்தா விகிதமும் உயர்த்தப்படுகின்றன. தனிப்பிரதி அணு 3. வருட சந்தா ரூ.2/4. ஜீவிய சந்தா ரூ. 50/- [க்ஷேமலாபங்களைப் படிக்கவும்.] இதுவரை விலையை உயர்த்தாதிருந்த நாம் இப்போதுநிர்ப்பந்தமாய் உயர்த்தும்படி விலைவாசிகள் அமைந்திருக்கின்றன. தற்போது கதைப் பாகத்தில் பக்கம் ஒன்றுக்கு 40 அல்லது 41 வரிகள் இருக்கின்றன. அடுத்த இதழிலிருந்து ஒவ்வொரு பக்கத்திலும் 5 அல்லது 6 வரிகள் அதிகப்படுத்துகிறோம். இந்த பேப்பர் பஞ்சக் காலத்தில் ஒரு பக்கத்துக்கு ஒரு தம்பிடி வீதம் கொடுப்பது அதிகமல்லவென்பதை நேயர்கள் உணர்ந்து, இந்தச் சிறு விலை உயர்வை பொருட்படுத்தாது மோகினியை எப்போதும்போல் வரவேற்பார்களென்ற நம்பிக்கை பரிபூர்ணமாக இருக்கிறது.

**1-2-43.** **மானேஜர்**

"உடலால் ஏற்பட்ட எந்த வியாதிக்கும் தக்க அவுஷதத்தைக் கொடுத்து குணப்படுத்திவிட முடியும். மனோ வியாதிக்கு மருந்து கொடுக்கவோ, மந்திரம் செய்யவோ, யாராலாவது முடியுமா! ஸாரநாதனின் கல்யாண விஷயமாக எத்தனை ஏற்பாடுகள் செய்தும் வேளை வரவில்லையே! கடிதத்தின்மீது கடிதமாகப் போட்டும் அவர்களுக்குச் சமயம் சரியில்லாதிருக்கிறதே. என்ன செய்வது? ஸாரநாதனின் உடம்போ நாளைக்குநாள் மெலிவுற்றுக் கேவலமாகிவிடுகிறதைப் பார்த்தால் எனக்குப் பயமாயிருக்கிறதே. இதே பெண்தான் வேண்டுமென்று என்ன அவசியம்? எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தியை நிச்சயம் செய்தால் என்ன! இந்திராவின் நிலைமை கேவலமாயிருக்கையில் அவர்கள் எப்படி செய்யப் போகிறார்கள்?" என்று சற்று கோபம் த்வனிக்கும் குரலில் கல்யாணியம்மாளின் புருஷர் கேட்டார்.

க:—ஆமாம்! எனக்குந்தான் இப்படித் தோன்றுகிறது. அவன் என்னவோ ஒரே பிடிவாதமாய் 'கல்யாணம் செய்தால் சந்திராவை செய்யுங்கள்; இல்லையேல் கல்யாணமே வேண்டாம்' என்கிறான். என்ன செய்வது? அக்கா வீட்டில் சந்தர்ப்பம் இம்மாதிரி இருக்கிறதே. சேகரன் போன இடமே தெரியாது சண்டைக்குப் போய்விட்டான். இந்திராவின் நிலைதான் கேவலமாயிருக்கிறது. அக்கா தத்தளிக்கும்போது எப்படி நான் கல்யாணத்தைப்பற்றிப் பேசுவது? எதற்கும் ஒன்று செய்கிறேன். இந்திராவைப் பார்க்கப் போவதுபோல் போய் அக்காவிடம் வார்த்தையைச் சொல்லிப் பார்க்கிறேன். இந்திரா தேறமாட்டாள் என்று டாக்டர்கள் அபிப்ராயப்படுகிறார்களாம். ஆகையால் இந்திரா நன்றாயிருக்கும் போதே கல்யாணத்தைச் செய்துவிடும்படி ஜாடையாகத் தெரிவிக்கிறேன். என்ன பதில் வருகிறதோ பார்க்கிறேன்.—என்றாள்.

அதைக் கேட்டுக்கொண்டு வந்த ஸாரநாதன், "அம்மா! நானும் உன்னோடு வருகிறேன். தடங்கல் சொல்லாதே" என்று ஒரே போடு போட்டுவிட்டான். அன்றிரவே தாயும் மகனும் சேர்ந்து கிளம்பினார்கள்.

அப்போதுதான் அம்ருதவல்லியம்மாளும் சந்திராவும் தாம் தவறிப்போய் மறதியால் ரகஸியத்தை வெளியாக்கிவிட்ட விபரீதத்தை உணர்ந்து திடுக்கிட்டார்கள். ஆனால் சந்திராமட்டும் சளைக்கவில்லை. இச் சமயம் பொய்யை மறைத்து பின்னும் அதிர்ச்சியைக் கொடுத்தால் விபத்து அதிகரிக்கும் என்று எண்ணி குழந்தையைத் தாயாரிடம் கொடுத்துவிட்டு, "அக்கா! என்னருமை அக்கா!... திகைக்காதே. உன்னருமைச் சகோதரி சந்திரா நான்தான். சந்திராவாகவே நான் உன்முன் வந்து உனக்குப் பணிவிடைகளைச்செய்து இன்பமடையமுடியாதே என்று துடித்தேன். என் ஜீவன் முற்றும்

உன்னிடமே அலைந்துத் தவித்ததால் இந்த மாறு உடையிலாவது வந்து உனக்குச் சேவை செய்யும் பாக்யத்தை அடைந்தேன். கோபிக்காதே அக்கா!...நான் உனக்கு விரோதியில்லை. ஆண்டவன்மீது ஆணையாக நான் உன்னை என் அந்தரங்கக் கோயிலில் வைத்து நேசிக்கின்றேன். கடவுள் சாக்ஷியாக நான் நிரபராதி. சத்தியமாக அத்திம்பேரும் நிரபராதி. வீண் கவலையை விலைக்கு வாங்கிக்கொண்டு மனத்தைத் தளரவிட்டதன் பரிபவம் இந்த கதியாகிவிட்டது. அக்கா!...அக்கா!'' என்று தனது பூர்ண ஆவலையும் புதைந்துகிடந்த அன்பையுங் காட்டி அப்படியே அணைத்துக்கொண்டாள். இந்த காக்ஷியைக் கண்ட அம்ருதவல்லியம்மாளின் கண்ணில் நீர் தாரையாகப் பெருகுகிறது.

அதே சமயம் கல்யாணியம்மாளும் சாரநாதனும் முன்பு தெரிவித்தபடி இந்திராவைப் பார்க்கவந்ததுபோல் கல்யாணம் பேசி முடிக்கவந்தவர்கள் இந்த அத்புதத்தைக் கண்டு திகைப்பூண்டு மிதித்தவர்கள்போல் நின்றுவிட்டார்கள். அவன் கண்களை அவனாலேயே நம்பமுடியாது பிரமித்தவாறு "சந்திராவா?...இதென்ன புதிய நாகரீக வேஷமா! அல்லது...என்று இழுப்பதற்குள் நரஸிம்மன் இந்திராவின் சிக்கல்முக்கலான நிலைமையைக் கண்டு அங்கு கூட்டமிட்டுப் பேசக்கூடாதென்று திட்டத்துடன் எல்லோரையும் வெளியே அனுப்பிவிட்டுத் தான் மட்டும் சந்திராவுடன் அவள் பக்கத்தில் அமர்ந்தார்.

மறுபடியும் மூர்ச்சையாகிய இந்திரா கண்ணைத் திறக்கவேயில்லை. எல்லோரும் பதறிப்போய்விட்டார்கள். ஏதேதோ சிகித்ஸை செய்து வெகு நேரத்திற்குப்பிறகு கண்ணைத் திறந்தாள். "அப்பா!... அம்மா!'' என்று அலறினாள்.

"அக்கா! இதோ அம்மா வந்துவிடுவார்கள்...அம்மா! சீக்கிரம் வாம்மா''...என்று கூப்பிட்டபடியே இந்திராவைச் சேர்த்தணைத்துக்கொண்டு முகத்தோடு முகம் பதித்தாள். சந்திராவின் கண்களிலிருந்து பெருகும் கண்ணீர் இந்திராவின் கன்னத்தில் சுடச்சுட விழுந்து நனைந்து ஈரமாக்கிச் சில்லென்று உரைத்து இந்திராவை ஒரு துள்ளு துள்ளச் செய்தது.

தன் முழு பலத்தையும் காட்டி "சந்திரா!...ஐயோ!...சந்திரா! நீயா மிஸ் மேரியாய் வந்து எனக்கு...ஜலம்...மலம் முதல்...என்பதற்குள் துக்கம் இழுத்துக்கொண்டே போய்விட்டது. "அக்கா! அக்கா! இதென்ன வீண் கவலை. தன் குழந்தையின் பணிசெய்ய தாயார் எங்காவது பின்னடைவதுண்டா! அல்லது அசங்கியப்படுவதுதான் உண்டா! அன்பின்—பக்தியின்—முதிர்ச்சியால் பக்தர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு பகவானே கூலிக்காரனைப்போல் வேடந் தாங்கி பல அத்புதங்களைச் செய்து காட்டவில்லையா! தாயுமானரின் சரிதையை மறந்தாயா! பிட்டுக்கு மண் சுமந்ததையும், திருவேங்கடமுடையானே ஒட்டன்போல் வந்து மண் சுமந்த

கதையையும் மறந்தாயா! அங்ஙனமிருக்க எனக்கு உயிருக்குயிரா யிருக்கும் உனக்கு நான் செய்ததில் ஒரு வியப்பா! அனுவசியமாக உன் மனத்தில் நீயே வளர்த்திக்கொண்ட பெருந் தீயின் வேகத்திற் காக நான் வேஷம் மாறிவர நேர்ந்ததேயன்றி இல்லாவிடில் நான் அப்படியே உனக்கு என் சரீரத்தைச் செருப்பாயுழைக்கக் காத் திருக்கிறேன். அக்கா! நீயும் உன் கணவரும் குழந்தைகளும் சந் தோஷமாயிருந்தால் அதுவே எனக்குப்போதும்.''

என்று சொல்வதையெல்லாம் கேட்கக் கேட்க இந்திராவின் ஆவி துடிக்கிறது. பாகாயுருகி மனங்கரைந்தோடுகிறது. புலம்பு வதையும் விக்குவதையும் சகிக்கமுடியாது தத்தளிக்கிருள்.

இதே சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நரஸிம்மன் ''இந்திரா! ஏன் இந்த அழுகை அம்மா? குழந்தாய்! நான் உன்னைப் பெற்ற தகப்பனுர்தான்: உன் சகோதரியை வளர்த்த வெறும் மனிதன்தான்: இருப்பினும் என் கண்மணி சந்திராவைப் போன்ற விலையிலா மாணிக்கம் உலகில் கிடைக்குமா! என்றும், உன்னைப் போன்ற அல்ப சந்தேக பிராணி வேறு எங்கேனும் அகப்படுவாளா என்றுந்தான் என்னிதயம் பரிபூர்ணமாக நினைக்கின்றது. இனி யாவது நீ இந்தப் பரதேசிக்குழந்தையின்மீது பரிசுத்தமான வாத் ஸல்யத்தையும் நம்பிக்கையையும் வைத்து ஆதரிப்பாயா! உன் னுடைய இந்த நிலைமையில் நான் அதிகம் பேசுவதுகூடத் தகாது என்பது தெரிந்தும் பேசுகிறேன். என்னிதயம் பொங்கும் வேகத் தில் உன் நிலைமைகூட மறந்துவிடுகிறது. எங்கே இந்திரா! மாசு மருவற்ற மங்கையர் திலகம்போன்ற சந்திராவைக் கட்டிமுத்தமிடு. உன்னுடைய குழம்பித் தவித்த இதயத்தில் உத்தமமான ஒரு ஸ்தானத்தைக் கொடுத்து அணைத்துக்கொள்ளு. உன்னுடைய சந் தேகமே உன்னைப் பாழாக்கியதேயன்றி வேறில்லை என்பதை இனி யாவது நம்பு'' என்று தனது உணர்ச்சியின் மிகுதியினுல் பேசினுர்.

இச் சமயத்தில் இத்தகைய வார்த்தைகளைக் கூறி அவள் மனத் தைப் புண்படுத்தக்கூடாது என்று சந்திரா எத்தனைத் தடுத்தும் நரஸிம்மன் கேட்கவில்லை. சந்திராவுக்குத் தன் தந்தை இப்படிப் பேசுவது சற்றும் பிடிக்கவே இல்லை. அவள் முகம் கருத்து சுருங்கு கிறது. தந்தையின் பொறுமையற்ற நிலைமையின் விபரீதம் எங்கே இந்திராவுக்குப் பெருந் தீங்காக முடியுமோ! என்கிற பயத்தால் சடக்கென்று நரஸிம்மனின் வாயைத் தன்னிருகைகளாலும் கெட்டி யாகப் பொத்தி அவரைத் தன் முழு பலத்துடன் இழுத்துக்கொண்டு வந்து வெளியே நிறுத்தி ''அப்பா! இதென்ன ரௌத்திரகாண் டத்தில் இறங்கிவிட்டீர்கள்? உங்கள் செய்கை சற்றும் நன்ருக இல்லை. 100 குடம் ஜலத்தை அபிஷேகம் செய்ய எண்ணிய ஒரு பிராமணன் 99 குடத்தை ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்துவிட்டு நூருவது குடத்தில் தனது பொறுமையை இழந்துவிட்ட கதை யைப்போலல்லவா உங்கள் செய்கையிருக்கிறது? நீங்கள் தயவு

செய்து எனக்காக சற்று நேரம் உள்ளே வரவேண்டாம். நானே அக்காவிடமிருக்க ஆசைப்படுகிறேன்''...என்று அவரை நிறுத்தி விட்டு உள்ளே ஓடிவந்தாள். தன் தகப்பனாரின் மூடத்தனமும் ஆத்திரமும் இந்திராவை ஒன்றும் செய்யாதிருக்கவேண்டுமே என்கிற பெருந் திகில் அவள் இதயத்தைப் பிளந்தது.

## 51

அதிக நாட்கள் செல்லவில்லை. பின்னும் ஒன்றிரண்டு நாட்களே ஆயின. நன்மை வளருவதாயினும் தீமை வளருவதாயினும் நாட்கள் கணக்குக்கூட தேவையில்லையல்லவா! நிமிஷக் கணக்கின் வேகமே யுகக் கணக்கில் ஆகக்கூடிய பலனைத் தேடிக்கொடுத்துத் தனது முழு சக்தியையும் காட்டிவிடுமல்லவா!

அதேபோல இந்திராவின் அளிந்த புண்ணாகிய இதயத்தில் சந்திரா என்கிற பெயருக்கு ஏற்ற மிகக் குளிர்ச்சியான குணமே ரணத்தையாற்றும் அவுடதம்போலாகியதால் இந்திராவால் பேசவே முடியவில்லை. எனினும் சந்திராவின் முகத்தோடு தன் முகம் பதித்துக்கொண்டு கண்ணீர்விடும் நிலைமைமட்டும் விடவே இல்லை. தன் குழந்தைகளையும் அவள் மறந்தே போனாள்.

தனது அழுக்குப்படிந்த பொறுமை உள்ளத்தின் தீ தன் வாழ்க்கையின் கட்டிடத்தையே எவ்வளவு தூரம் எரித்துவிட்டது என்கிற பயங்கரம் இப்போதுதான் சிறிது சிறிதாகத் தெரியத் தொடங்கியதும் அவளால் தாங்கமுடியாத துக்கமே பொங்கியது.

பெரிய அலற்றல் தொண்டையுடன் 'சந்திரா!' என்று கர்ஜிக்கின்றாள். ஆனால் வாயில் மறுபேச்சு எழும்பவில்லை. கண்ணை மூடிக் கொண்டு மவுனக் கடலில் ஆழ்ந்துவிடுகிறாள். இதற்கு முன்பெல்லாம் ''மிஸ் மேரி! எங்கே என் கண்மணிகளைக் கொண்டுவந்து காட்டு!'' என்று அடிக்கடி கேட்கும் இந்திரா இப்போது அந்த வார்த்தையை எடுக்காததால் சந்திராவுக்கு மிக்க விசனமாகவும் பயமாகவும் இருந்தது.

அவளுடைய நர்ஸ் உடை அன்றோடு மறைந்தது. தங்கப் பதுமைக்கும் உயிர் உண்டா! ம்ருதுத்தன்மை உண்டா! மதுர கண்டம் உண்டா! என்று ஐயுறும்படி நிமிடத்திற்கு நிமிடம் அழகு வெள்ளம் கரைபுரண்டு வருவதுபோல் சுந்தரவதனியாய் விளங்கினாள். முன்பொரு காலத்தில் சந்திராவின் எழில் முகாரவிந்தம் இந்திராவின் மனத்தில் பெரும் புயலைக் கிளப்பி பேரிடிமழையில் கொண்டுவிட்ட அதே இதயம், இன்று அலைகாற்றில் தத்தளித்துத் தவித்த மரக்கலம் கரையைக் கண்டு நங்கூரம் பாய்ச்சி நிலையில் நிற்கும் தோற்றம்போல் நிற்பதை அவளாலேயே நம்பக்கூடவில்லை.

சந்திராவின் அழகு இன்று, இச்சமயம் அமிருததாரைபோலும் உலகில் இணையிலாத சாந்தஸ்வரூபம்போலும் தோன்றி, அத்தகைய இளந்தளிரை நாம் எரித்துவிட்டோமோ என்ற எண்ணம் ஆணிவேர் போல் பதிந்து வேலைசெய்ய வாரம்பித்தது.

சந்திரா, எப்படியாவது தன் சகோதரி குணப்பட்டுச் சந்தோஷமாகிவிட்டால் போதும் என்கிற பேராவலால் அவளுக்கு இதுகாறும் தான் செய்த பணிவிடைகளைவிட அதிகமான பரிவுடன் பணிவிடை செய்தும் குழந்தைகளைத் தானே இந்திராவிடம் காட்டி சதா அவளை மகிழச் செய்தும் பார்த்தாள்.

ஆனால் காலதேவதையின் திருவுள்ளத் தாண்டவம் வேறுவிதமாக மாறிவிட்ட விபரீதத்தில் இந்திராவின் இதயம் வரண்ட சூனிய உலகத்தைப்போல் பொலிவிழந்து சோகம் நிறைந்து வெறுப்பும் விரக்தியும் குடிகொண்டன. குழந்தைகளைப் பார்க்கவும் வெறுத்தாள். எப்படியாவது தன் கணவனைப் பார்த்து அவன் திருவடிகளில் தன்னுடைய அபராதத்தைத் தெரிவித்து மன்னிப்புக் கோரினால் போதும். அது கிடைக்குமா! பயங்கரமான யுத்தத்திற்குச் சென்றுவிட்ட அவர் ஆபத்தின்றி திரும்பி வருவரா! தான் அசட்டுத்தனமாகச் செய்துவிட்ட குற்றத்தை மன்னிப்பாரா! என்ற ஏக்கமே குடிகொண்டது. இதை எப்படித்தான் யார்தான் நிவர்த்தி செய்ய முடியும்! அவளது, கலக்கம் அதிகரித்து எவ்வளவு தேறுதல்கள் கூறியும் எத்தனை சந்தோஷப்படுத்தியும் பயனற்றுவிட்டது. "சந்திரா!...சந்திரா!...என்னை மன்னிப்பாயா!...உன் அத்திம்பேர் என்னை மன்னிப்பாரா! என்னுடைய நிலைமையில் நீங்கள்தான் பெரிய நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். ஆனால், எனக்கு நம்பிக்கை ஒழிந்து நிம்மதியும் சாச்வத நிலைமையும் உண்டாகிவிட்டன. இப்பாழும் உயிர் போவதற்குள் உன் அத்திம்பேரை ஒருமுறை என் கண்ணாரக்கண்டு அவருக்கும் உனக்கும் நான் இழைத்த தீங்கிற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் ஒரு சிறிது என் மனப் புயல் அடங்கி ஒரு கடுகளவு சாந்தியளிக்கும்...

சந்திரா!...சந்திரா!...நீ ஏன் இப்படிப் புலம்பவேண்டும்?... பதியே தெய்வமென்று இருக்கவேண்டிய சதியின் தர்மத்தை மமதையினால் மறந்துபோய் சதிசெய்த நானல்லவோ புலம்பிச் சாகவேண்டும். அணுவளவும் குற்றமில்லாத நிரபராதிகளின்மீது புரட்டிய பெரிய எரியலை என்னையே தாக்கிவதைக்காமல் விடாது. அரசன் அன்றுகொல்லும் தெய்வம் நின்றுகொல்லும் என்கிற பழமொழியை நான் ஒருநிமிடங்கூட நினைக்காதிருந்த திமிர் இப்போது சதா நினைக்கும்படிக்குச் செய்துவிட்டது.

சந்திரா!...இந்த துரதிஷ்டப் பிண்டங்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நீ வளர்ந்த பரதேசித்தனமே எனக்கு நம்பிக்கை உண்டுபண்ணுகிறது நம் பெற்றோர்களின் தலைவிதியையும் நான் நினைக்கவில்லை. அவர்...அந்த பரிசுத்தாத்மாவை ஒருமுறை கண்ணால்

காண்பேனா!...அவர் திருவடித் தாமரை கிடைக்குமா! ஒருகால் பார்க்காமலேயே நான் போய்விட்டால் நான் அவரிடம் அபராதக்ஷாமணம் கேட்டதாகத் தெரிவிப்பாயா? எனக்கு மன்னிப்பு இருவரும் கொடுத்து மறுபிறவிக்காவது கடைத்தேற அனுக்ரகிப்பீர்களா!''...என்று ஓயாது ஒழியாது வாய்ப்பிதற்ற வாரம்பித்தாள்.

அமிருதவல்லியம்மாளுக்கும் சந்திராவுக்கும் ஒன்றுமே தோன்ருது பெருத்த கவலையும் பயமும் உண்டாகியது. சந்திரா தன்னாலானமட்டும் சமாதானங்கள் செய்து, ''அக்கா! நீ இப்படி அனுவசியமாகப் பயப்படாதே. நீ ஒருபோதும் இறந்துபோகமாட்டாய். உனக்கு நன்ருகக் குணமாகிவிடும். அத்திம்பேர் கட்டாயம் வந்து உன்னை மகிழ்விப்பார். பயப்படாதே. விதி! விதி என்று சதா முறையிடுகிருேமே! அந்த விதி யாரைவிட்டது சாக்ஷாத் ஸீதாபிராட்டியையும் ஸ்ரீராமசந்திரனையும் விட்டதா! பகவானின் துணை எப்போதும் பரிபூர்ணமாகப் பெற்றிருந்த த்ரௌபதைக்கு விட்டதா! பகவானையே தன் குட்சியில் சுமந்து பெற்ற வசுதேவ தேவகிக்கு விட்டதா! மும்மூர்த்திகளை பதிகளாக அடைந்திருந்த லக்ஷ்மி, பார்வதி, சரஸ்வதி இவர்களை விதி விட்டதா! அனுசூயா தேவியிடம் தம்முடைய பதியை பிக்ஷை கேட்கவில்லையா! எத்தகைய தேவாதி தேவர்களையும் பரம பக்தர்களையும் விதி என்பது ஆட்டித் தன் ஆக்ஷியைப் புரியாது விடாது என்கிற தத்துவத்தை நமது புனிதமான இந்து தர்ம சாஸ்திரம் ஒவ்வொரு நுட்பமான விஷயத்திலும் விளக்குவதை நாம் மறக்கமுடியுமா?

மகா மகா பட்டவர்களுக்கே இக்கதி என்ருல் நம்போன்ற அல்ப மனிதர்களுக்குக் கேட்கவேண்டுமா! விதியின் ஆட்சியில் அகப்பட்டுத் தவித்த காலம் மறைந்துவிட்டது. இனி கவலையே இருக்காது அக்கா! நீ இம்மாதிரி பேசினுல் நம் அம்மாவின் வயிறு கொதிக்காதா! அவர்களை நீ இப்படி வதைக்கலாமா!'' என்று பெரிய புராண ப்ரஸங்கம் செய்தாள்.

சந்திராவின் அபரிமிதமான ஞானத்தின் ஜோதி எல்லோரையும் பிரமிக்கச் செய்தது. இந்திராவுக்கு இதே ஞானேபதேசம் ஆதியில் செய்திருந்தால் அது விரோதபாணமாகவும் விஷயமற்ற சூன்ய வசனங்களாகவும் தோன்றியிருக்கலாம். ஆனுல் இன்று அதே மொழிகள் நிகரற்ற குருவின் உபதேசமாகத் தோன்றியதால் சந்திராவைத் தழுவிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் உதிர்த்தாள்.

அதே சமயம் ஒரு தந்திச் சேவகன் ''ஸ்ரீமதி இந்திரா தேவிக்கு ஒரு தந்தி'' என்ருன். ''இந்திராவுக்குத் தந்தியா!''...என்று எல்லோரும் நடுநடுங்கி வியப்புக்கடலாடினுர்கள். உடனே தந்தியைச் சந்திராவே வாங்கிவந்து இந்திராவிடம் கொடுத்தாள். அதிர்ச்சியோடு அதிர்ச்சியாக இந்திரா தந்தியைப் பிரித்துப் பார்த்தாள்... ''அன்பார்ந்த இந்திரா!...இதோ புறப்பட்டுவிட்டேன், உன் ப்ரிய சேகர்''...என்கிற வரிகளைக் கண்டதும் அவள் இதயம் எப்படித்தான்

பொங்கிப் பூரித்திருக்கும் என்பதைச் சொல்லவேண்டுமா! “சந்திரா...சந்திரா...இதோ! தந்தியைப் பாரு...படித்துப்பாரு... அம்மாவுக்குக் காட்டு...அப்பாவுக்குக் காட்டு...சந்திரா!...என் கண்மணீ!...இனி நான் சாக விரும்பமாட்டேன்...சாகவே மாட்டேன்...எமனை விரட்டிவிடுவேன்...எமனைத் தூத்தியடிப் பேன்”...என்று களிவெறி மிகுதியின் வேகத்தில், தான் படுக்கையி லிருப்பதையும் மறந்து குதித்தாள்; கொக்கரித்தாள். ஆனந்த மிகுதி யால் உடல் பூரித்தாள்.

இந்த தந்தி எல்லோருக்கும் பெருமிதமான வியப்பையும் மன மகிழ்ச்சியையும் கொடுத்தது. ஆனால் சந்திராவின் தனி இன்பத்தை மற்றவர்களுடன் ஒப்பிட்டுக் கூறமுடியுமா! தனி யுலகத்தில் தனி யானந்தத்தில் மிதந்தது.

## 52

அன்று நடுவீதியில் சந்திராவைக் கண்டபிறகு ஸ்ரீதரனுக்கு திடீரென்று பகவான் கண்ணைக் கொடுத்தும் பிடுங்கிக் கொண்டதுபோல் ஆய்விட்டது. இதுகாறும் நடைப்பிணமாகத் தனது கடமையைச் செய்துவரும் நிலைமையிலும் சிறிது சலிப்பும் சோர்வும் வாழ்க்கைப் பாதையின் அந்தகாரத்தின் பயங்கரத் தோற்றமுமே அவனுக்கு என்றுமில்லாத நிலையில் தலை தூக்கிய வேகத்தில் ஒரு வேலையிலும் மனது செல்லாது கேவலம் பயித்தியம் போலாகிவிட்டது. “இதென்ன உலகம்! இதென்ன வாழ்க்கை... ஏன் நாம் இப்படி உழலவேண்டும்? குடும்ப வாழ்க்கையே அநித்யம் என்றும் பகவத்பாதங்களில் போய்ச் சேரவேண்டியதே நித்யம் என்றும் முறையிடும் நமது சாஸ்திரத்தின் விதிப்படிக்கு நான் ஏன் ஒரு சன்யாசியாகிவிடக்கூடாது? எப்போது என்னுடைய இன்பத் திற்கு ஆதிதேவதை என்ற ப்ரகாசத்தை இழந்தேனே அன்றே நான் ஒரு உறுதியான ப்ரம்மச்சாரியாய்...சன்யாசியாய் இருப்பதை பக வானறியவில்லையா...என்னிதயந்தான் அறியாதா...வெளிப் பார் வையில் நான் ஒரு குடும்பத்தலைவன் என்று நடித்த நடிப்பு இது வரையில் போதாதா...ஏன் இந்த வீண் பந்தத்தில் உழலவேண்டும்? நித்யமோ அநித்யமோ உலகத்திற்கெல்லாம் பொதுவாய் தொன்று தொட்டுவரும் இவ்வாழ்க்கையின் மனோகரத்தை ஒரு விநாடியும் சொப்பனத்தில்கூட கண்டறியாத எந்த மனிதனும் சன்யாசி தானே... அந்த முறையை பகிரங்கமாகத்தான் அனுஷ்டித்தால் என்ன?...ஏன் இனி நான் யாருக்குப் பயப்படவேண்டும்?...

ஊமை மனைவிக்கா?...இல்லை....இல்லை....நொண்டி மாமி யாருக்கா...இல்லை...தந்தைக்கா...அதுவுமில்லை...மற்ற யாருக்கு... உலக நிந்தைக்கு, வீண் வம்புக்கு ...சீ! இதென்ன குழப்பம்... யாருக்குயார் என்ன சம்மந்தம்?...ஏன் இந்த தத்துவம் நிலையில்

நிற்கவில்லை...கேவலம் ஒரு பெண்ணுக்காக ஆசைப்பட்டுக் கடமையைக் கைவிட்டான் பாவி. என்கிற வசை ஒன்றுதானே நிற்கும்...வாக்குதத்தத்தை மறந்தத்ரோகி...நம்பிக்கையைக் கொலை செய்த மித்திரத்ரோகி...என்று உலக முள்ளளவும் என்னைத் தூற்றுமே அந்த ஒன்றுக்குத்தான் நான் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

யௌவனமும் எழிலும் அழிவதுபோல் ஆசையும் அழிந்து விடக்கூடியதுதானே...அதற்காகவா நாம் மூன்று ஆத்மாக்களை விட்டுப்போவது...ஏன் ஒரு ப்ரளயம் வந்து அப்படியே அடித்துக் கொண்டு போய்விடக்கூடாதா!'' என்றெல்லாம் ஸ்ரீதரன் வெட்ட வெளியில் படுத்துத் தனக்குள் போராடிக்கொண்டிருந்தான்.

நிலவு பட்டுப்போல் காய்கிறதெனினும் அவன் கண்களுக்கு உலகம் இருண்ட சூன்யமாகவே தோன்றியது. ஏதேதோ எண்ணங்கள் அவன் மனக்கடலில் பெரும் அலைகள்போல் மோதின. ''ஏன்? இப்பாழும் ஜென்மத்தில் ஒரு சிறிய உதவியை தேசத்திற்காவது செய்தோம் என்கிற த்ருப்தியுடன் சாவதை ஏன் தேடிக் கொள்ளக்கூடாது? தேசம் தற்சமயம் தத்தளிக்கும் நிலைமையில் இருக்கும் பரிபவத்தால் எத்தனை பேர்கள் தம்தம் இன்ப சுகங்களை விட்டுத் தன் தேசத்திற்காக ராணுவத்தில் சேர்ந்து சேவை புரியவில்லை. நாமும் ஏன் அம்மாதிரிசெய்து அவ்வகையிலாவது இன்புற்று, ப்ராப்தமிருந்தால் வெற்றிமாலை...இல்லையேல் வீரச்வர்க்கம்... இரண்டில் ஒன்றை ஏன் அடையக்கூடாது? கோடிக்கணக்கான மக்கள் செய்யும் நற்காரியத்தில் நாமும் ஏன் ப்ரவேசிக்கக்கூடாது? மனைவிக்கும் மற்றவர்களுக்கும் ஏராளமான சொத்து இருக்கிறது. இனி என்னிடம் அவர்கள் இஜ்ஜென்மாவில் எதிர்பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? நான் கொடுத்துவைத்திருந்தால் என் பிதாவின் கைங்கர்யத்திற்கு வந்துவிடுகிறேன். அல்லது அவர் கொடுத்து வைத்தது இதுதான் என்று விதியிருந்தால் நான் வீரசொர்க்கத்தில் இன்புற்று அங்காவது சந்தோஷமாக விருக்கிறேன். இவ்வளவு தானே...ஏன் இதைச் செய்யக்கூடாது...ஆம்...கட்டாயம் செய்தே தீரவேண்டும். பட்டாளத்தில் சேருவதற்கு நாளையே தயாராக வேண்டும்...அதற்குள் என் கண்மணி சந்திராவை ஒருமுறை கண்ணாரக் கண்டு களித்தால் போதும். ஆம். இதுவே கடைசீதரம்....இதுவே எனது வாழ்க்கையின் கடைசிபாகம்... ஏன் நானே கற்பனைக்கோட்டை யூருக்குச் சென்று என் இன்ப ராணியைப்பார்த்துவிட்டு வந்தால்தான் என்ன...ஏன் பார்க்கக் கூடாது...முதலில் அவளைப் பார்த்துப் பின் ராணுவத்தில் போய் விடுவது. இதுதான் முடிவு.' என்று பித்தன்போல் எண்ணித் தனக்குத்தானே பேசி முடிவுகட்டிக்கொண்டான். அம்முடிவே அந்த சமயத்தில் ஓர் ஆறுதலாயும் நிம்மதியாயும் இருந்தது. அதுவும் ஒரு இன்பமென்றே அவன் இதயம் கூறியது.

அதிக சந்தோஷத்தின் மிகுதியால் இந்திராவுக்கு மார்பு துடிப்பும் படபடப்பும் அதிகமாகிவிட்டது. நிமிடத்திற்கு நிமிடம் மயக்கமும் சோர்வும் உண்டாவதைக் காண சந்திராவின் கலக்கந்தான் அதிகரித்தது. அத்தனை மயக்கத்து மத்தியிலும் "சந்திரா! உன் அத்திம்பேரின் உத்தமகுணத்தின் அழகை நான் என்னென்று சொல்லுவேன். அவருக்கு நான் இத்தனை தீங்கு நினைத்திருந்தும் அவர் வருவதாகத் தந்தி கொடுத்திருக்கும் ஆச்சரியத்தைக் கூறவே முடியவில்லையே! சந்திரா! அவர் என்னை மன்னித்துவிடுவாரல்லவா! சொல்லு...சொல்லு. சந்திரா!...ஒருகால்...மன்னிக்காவிட்டால்... என்று அலற்றுவாள்.

"அக்கா! உன்னை மன்னிப்பதற்காகத்தானே அவர் வருகிறார். நீ இனி கவலையே படாதே அக்கா! உன் குழந்தைகள் எப்படித் தான் வளர்ந்திருக்கிறார்கள், சிரித்து விளையாடுகிறார்கள் பார்க்கா...இதோ பாரேன்" என்று தானாக குழந்தைகளை வலுவில் கொண்டுவந்து விளையாடவைத்துக் காட்டினாள்.

பெத்த பாசத்தை நீக்கி உலர்ந்த மரக்கட்டையைப் போன்ற இதயத்துடனிருப்பதற்கு யாரால்தான் முடியும்? இந்திரா தன் குழந்தைகள் களகளவென்று சிரித்து விளையாடுவதைக் கண்டதும் இது காறும் இல்லாத நூதன சந்தோஷமும் வாத்ஸல்யமும் பெருக்கெடுத்தன. குழந்தைகளை அணைத்துக் கட்டி முத்தமிட்டு பெருமிதமான உணர்ச்சியுடன் ஆனந்தக் கண்ணீர் சொறிந்தாள்.

அடுத்த வினாடியே அந்த ஆனந்தக் கண்ணீர், ஏக்கமும் துக்கமும் நிறைந்த கண்ணீராக மாறி "சந்திரா! ஐயோ! இவைகளை ஏன் என் முன்பு கொண்டுவந்தாய்? எனக்கு மன உறுதியும் வைராக்யமும் குலைந்துபோகிறதே! இந்த அருமையான குழந்தைகளைவிட்டு விட்டு நான்தான் போகப்போகிறேனே! இந்த கண்மணிகளைவிட்டு நான் எப்படிப் போவேன்? சந்திரா...சந்திரா...இப்படியா என் விதி அமையவேண்டும்?" என்று மறுபடியும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

சந்திரா குழந்தைகளைத் தன் தாயாரிடம் கொடுத்துவிட்டு அன்பும் ஆர்வமும் கனிந்தொழுக "அக்கா! நீ ஏன் இம்மாதிரி வீண் கவலைப்படுகிறாய்? உனக்கொரு குறைவும் இல்லை. உன் குழந்தைகளுக்கு நீ எத்தனையோ காலம் தாயாக இருந்து ஆதரிக்கப் போகிறாய்...அக்கா!...அக்கா!...இதென்ன அழுகை...ஏன் இம்மாதிரி பார்க்கிறாய்...அக்கா!...அக்கா!"...என்று இந்திராவைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

இந்தி:—உம்...பயித்தியக்காரி...எனக்கு பகவான் சரியான புத்தியைக் கொடுத்தும், என்னுடைய தலைவிதி கோணவழியில் என்னை இழுத்துக்கொண்டுபோய் இந்த கதிக்கு ஆளாக்கிவிட்டது போதாதா! இனி எனக்குப் பிழைப்பாவது வாழ்வாவது கிடைக்

கவே கிடைக்காது. சந்திரா! நேற்றிரவு அப்பாவும் டாக்டரும் பேசுவதை நான் கேட்டுவிட்டேன். இனி என்ன சந்தேகம்...என்னாலேயே நான் கெட்டவயிற்றெரிச்சலை நான் எப்படித்தான் சகிப்பேன். சந்திரா!...சந்திரா!...என் கணவர் வரும்வரையில்கூட நான் உயிருடன் இருக்கமாட்டேன்போலிருக்கிறதே.

ஹா! சந்திரா!...இப்படி வா...என்னைக் கட்டிக்கொள்ளு. என்னை அணைத்துக்கொள்ளு...கண்மணி! என்னை நீ மன்னித்து நான் கேட்பதற்குப் பதில் சொல்வாயா?...என்மீது கோபமில்லையே! சொல்லு...கோபமில்லையே...இல்லை...உனது பவித்திரமான இதயத்தில் கோபத்திற்கு அணுவளவும் இடமில்லை. வாத்ஸல்யம் நிறைந்த கருணாலயம், க்ருபாமந்திரம், உபகாரக்குன்றம், பிரதிபலன் கருதாத மேகம் போன்ற உத்தமமான பிரேமை மழை பொழியும் உயர்ந்த குணசாகரமல்லவா உன்னிதயத்தில் நிலைபெறும்? இல்லையென்றால் விஷத்தைக் கக்கிய சர்ப்பத்தை உன் மடியில் போட்டுக்கொண்டு பால் வார்த்திருப்பாயா...சந்திரா...இதோ பாரு...இனி இந்த அழுகைக்கு இடமில்லை. அதிக நாள் இந்த கட்டை ஜீவித்திருக்கமுடியாது...

சந்திரா!...'பாதகி...த்ரோகி...க்ருதக்ஞையற்ற கட்டை, வஞ்சனை வலை வீசி வாழ்க்கையை ஹதம் செய்த சண்டாளி, சந்தேகப் பிசாசிற்குத் தன்னகக்கோட்டையில் இடங்கொடுத்து வளர்த்த நாசகாலி'....என்றெல்லாம் உலகம் உள்ளளவும் என்னைத் தூற்றி வசை மாரியைப் பொழியும்படியான கீர்த்தியை நான் தேடிக்கொண்டதுதான் நின்றது...அந்த வசைகள் என்னோடு மறையட்டும்...என் கண்மணிகள்....சந்திரா!...நிராதரவான இந்தப் பச்சை சிசுக்கள்...திக்கற்ற நாதியற்ற பிண்டங்கள்...ஐயோ...சந்திரா...இந்த அனாதைகளை நீ கைவிடாமல் காப்பாற்றுவாயா...இந்த குழந்தைகளை உன் குழந்தைகளைப்போல் எண்ண...ஆம்...நீ எண்ணலாம்....உனக்கு வரும் கணவன் எப்படி நினைக்கக்கூடும். அவன் அயலல்லவா...

மேலே பேசக்கூடாது மார்பு படபடத்து சோர்வு உண்டாகியது. சந்திரா அவளை அணைத்தபடியே "அக்கா! இதென்ன வீண் பேத்தல்...உனக்கு உயிர்ப் பயமே இல்லையக்கா! நம் தாயாருக்கு அத்தகைய துர்ப்பாக்யத்தைப் பகவான் வைக்கமாட்டார்...நீ அனாவச்யமாகக் கவலைப்படாதே...

இந்:—நிறுத்து...சந்திரா!...இனி இந்த வார்த்தைக்கு இடமில்லை. நான் மகாபாவி. என் பாவம் நம் தாயைத் தாக்கப்போகிறது. அந்தம்மாளின் துக்கத்தில் இந்த பரதேசிகளைக் காக்கமாட்டார்கள்.. சந்திரா!...இக் குழந்தைகளின் கதி...

சந்:—அக்கா!...தெய்வ சங்கல்பத்தில் அப்படி ஏதேனும் நேர்ந்துவிட்டால் என்னுயிர் உள்ளளவும் இக்குழந்தைகளைக் கைவிட

மாட்டேன்... அவர்களுக்கே என்னுயிர், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்வேன்...

இந்தி:—ஹா....ஐயோ!...சந்திரா....சந்திரா....உன் பவித்திர இதயத்தைப்போல் உன் கணவன் இதயமிருக்குமா?....

சந்:—அக்கா! உனக்காகவும் உன் குழந்தைகளுக்காகவும் நான் என் வாழ்நாள் முற்றும் கன்னிகையாகவே காலத்தைக் கழிப்பேன். உனக்கு ஆண்டவன்மீது ஆணையாக வாக்குதத்தம் செய்துத் தருகிறேன். நான் மணம் செய்துகொண்டாலல்லவா நான் கணவனின் அடிமை...பிறகு எனக்குக் குழந்தைகள்... ஒருவிதமான பந்தமுமின்றி என் செல்வங்களின் தலைமீது அடித்து நான் சபதம் செய்கிறேன்... அக்கா! நம்புகிருயா...என்னை நம்புகிருயா...

இந்த வார்த்தை இந்திராவின் இதயத்தின் அடிபாகம்வரையில் தளாவி அவளைக் குலுக்கிவிட்டது...பதில் பேசமுடியாது தொண்டையடைக்கும் துக்கத்துடன் சந்திராவைக் கட்டிக் கொண்டு, "ஹா...சந்திரா!....சந்திரா!....முடியாது....முடியவே முடியாது...இந்த கொடிய பயங்கரமான சபதத்தை நான் ஏற்றுக் கொள்ளவே முடியாது. உன் வயிற்றில் குழந்தைகள் பிறந்து அதை ஆசீர்வதிக்க உன் பெற்ளேர்கள் தெய்வம்போல் காத்திருக்கிருர்கள். நான் உனக்குச்செய்த சதி எல்லாம் போதும்...இனியும் சதி செய்யக் கனவிலும் நினைக்கமாட்டேன்...சந்திரா!...கண்மணீ... நான் இதுகாறும் செய்த மகத்தான த்ரோகத்திற்கு ப்ராயச் சித்தம் எது தெரியுமா? என் கணவருக்கு நான் செய்த சதிக்கு ப்ரதியுபகாரம் எது தெரியுமா...சந்திரா....என் அந்திமகால ப்ரார்த் தனை இதுதான்...என் கணவரையே நீ மாலையிட்டு, அவருக்கே நீ இன்ப ராணியாக அமைந்து, என்னுடைய ஸ்தானத்திலிருந்து என் கண்மணிகளையும் காப்பாற்றி, அவர்களுக்கு தம்பி தங்கைகளையும் பெற்றுக்கொடுத்து மகிழச்செய்து நம் பேற்ளேர்களையும் கைவிடாது காத்து வரவேண்டும் என்பதே என்னிறுதி ப்ரார்த்தனை"...என்று இந்திரா ஆவேசத்துடன் சொல்லிய வார்த்தைகள் சந்திராவை அப்படியே அக்கினி மலையில் தூக்கிப்போட்டதுபோலாகின.

"ஹா! அக்கா! என்ன சொன்னுய்? அத்திம்பேரை நான் மணப்பதா?...இது எனக்கு நீ விதிக்கும் மகா கடுமையான தண்டனையே யன்றி அன்புடன் ஆசீர்வதிப்பதல்லவே...ஐயோ! தலைசுழலுகின்றதே கன்னிகையாயிருந்து களிப்புடன் காலத்தைக் கடத்த எண்ணிய எனக்கு இதுதானு முடிவு...இதுதானு முடிவு...அம்மா...என்னை ஈன்ற தாயே!...நீ இப்போது எங்கோ தெய்வமாயிருக்கிருய்...நீ உண்மைப் பத்தினியாயிருந்தால் என்னிதயம் அமிருதமயமாயிருந்தால் இக் கொடிய பேராபத்திலிருந்து என்னை நிரந்தரமான விடுதலை செய்து அழைத்துக் கொண்டுபோய் என் சகோதரிக்கு உயிர்ப்பிச்சை கொடுத்துக் காப்பாற்றேன்...காப்பாற்றமாட்டாயா...என் ஸ்ரீதரனை யன்றி என் இன்பதுரையை இன்றி இனி மாலையிடுவதா...மகிழ்

வதா...வேருெருவருக்கு பத்தினியாக நடிப்பதா...ஐயோ...கடைசி காலத்திலாவது எனக்கு விமோசனம் உண்டாகும். கன்னிகை என்கிற திரைச்சீலைக்குள் மறைந்து வாழ நினைத்தேனே... அதற்குமா பஞ்சம்...அம்மா!...அனுசூயாதேவி......என்னை இனி சோதிக்காதே...இந்த இதயம் இனி சோதனையைத் தாங்கும் சக்தி இல்லை... என் சகோதரியின் உயிருக்குப் பதில் என்னுயிரை ஆனந்தமாக அர்ப்பணம் செய்கிறேன். சந்தோஷமாக எமதர்மராஜனிடம் சமர்ப்பிக்கிறேன்...நீ சிபார்சு செய்யம்மா....சிபார்சுக்குக்கூடவா பஞ்சம்!'' என்று தன்னிரையழிந்த நிலைமையில் தனக்குள் எண்ணியவாறே எழுந்து வேகமாகத் தன்னறைக்குப் போய் தடாரென்று விழுந்துவிட்டாள். அவளுடைய வாழ்நாளிலேயே இன்றளவும் இத்தகைய சங்கடத்தை யறியாத உள்ளம் துடியாய்த் துடிக்கின்றது. ப்ரக்ஞையே அற்றது.

## 54

தான் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு புழுகாய்த் துடித்தவாறு எழுந்து சென்ற சந்திராவின் மனே ரகஸிய மறியாத இந்திராவுக்கு இச் செய்கை மிகவும் மர்மமாயும் ஆச்சரியமாயுமிருந்தது. தான் சொல்லியது சரியானதா தப்பானதா என்கிற எண்ணம் அவள் மனத்தில் படவே இல்லை. தன் குழந்தைகளுக்காக அவள் தன் ஸ்தானத்திலிருப்பதுதான் உத்தமம்....அவளுக்கு தான் நினைத்த சகிக்கு இதுதான் தக்க ப்ரதியுபகாரம் என்றே அவள் உள்ளம் எண்ணிக் குழம்பியது.

எழுந்துபோய் சந்திராவைப் பார்க்கும் சக்தி இல்லாததால் தத்தளித்தவாறு புரண்டு புரண்டு படுத்தாள். தன் தாயாரை அருகிலழைத்து, "அம்மா! நான் மகா பாவியான ஜென்மம் எடுத்தது போல் அல்பாயுஸாகவும் போகப் போகிறேன். இனி என்னைப் பற்றிய நம்பிக்கை அடியோடு மறைந்தாய்விட்டது. உன் மனத்தை உறுதிப்படுத்திக்கொண்டு உன் கண்மணி சந்திராவே உனக்குச் சகலமும் என்று நினைத்து என் மரணத்தறுவாயிலுள்ள ஒரே ஒரு ஆவலைப் பூர்த்தி செய்யவேண்டும்.

அம்மா! இன்றேயோ, இன்னும் சில தினங்களிலேயோ இந்த பாதகி இவ்வுலகைவிட்டு மறைந்துவிடுவாள். விலையிலா மாணிக்கம் போன்ற குணத்துடைய உன் மருமகப்பிள்ளையை நீங்கள் இழந்தால் இந்த துர்ப்பாக்யப் பிண்டங்களின் கதி அதோகதியாகிவிடும். சந்திராவை நீங்கள் சர்வசம்மதத்துடன் என் கணவருக்கே மணம் செய்வித்து அவர்களை உங்களருகிலேயே வைத்துக்கொண்டுநீங்கள் சந்தோஷமாயிருங்கள். இதை என்னுயிர் போகும்முன் நடத்திக் காட்டிவிடுங்கள்...என்னம்மா...ஏதோமாதிரி விழிக்கிருய்? சந்திரா

விடம் நானே சொல்லிவிட்டேன். அவள் தாங்கமுடியாத துக்கத் துடன் எழுந்துபோனுள். அவளைக் கூப்பிட்டுக்கொண்டு வா... போம்மா...போ!''...என்று பிதற்றினுள்.

அமிருதவல்லியம்மாளின் ஆச்சரியம் துக்கம் இரண்டும் கரை புரண்டன. எத்தனை மன உறுதியிருப்பினும் வயிற்றில் பிறந்த பெண் மலைபோன்றவள் இறப்பதற்கு எந்த பெற்ற தாயின் உள்ளந்தான் துடிக்காமலிருக்கும்? எவருடைய இதயந்தான் கல்லாகமுடியும். எனினும் இந்திராவின் வாயிலிருந்து இத்தகைய வார்த்தை வரும் என்று சற்றும் எதிர்பார்க்கவேயில்லை. ''அவள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளா இவை!''...என்று பிரமித்தாள்.

சந்திராவின் உள் ரகஸியம் தெரியாததால் இந்த கோரிக்கை அமிருதவல்லியம்மாள் மனத்திற்குப் பரம த்ருப்தியாகவே இருந்தது. சந்திராவும் இதற்குச் சம்மதிப்பாள் என்றே அந்தம் மாள் நம்பி எழுந்து அவளிடம் வந்தாள்.

சந்திரா வெகு நேரம் கண்ணீர் பெருக நாதியற்ற பிணம் போல் படுத்திருந்தவள் தானுகவே சிறிது தெளிவு பெற்று எழுந் தாள். உலகமே தலைகீழாகச் சுற்றுவதுபோலும் பெரிய நெருப்புக் காளவாயில் தன்னைப் போட்டுப் பொசுக்குவதுபோலும் தோன்றிய வேதனையுடன் அவ்வறையிலேயே அங்கும் இங்கும் உலாவினுள்.

மனது நிலைக்கவில்லை. தத்தளிக்கின்றது. ''எனக்கு இந்த முடிவு தானு...இதுதான் எல்லோருக்கும் சம்மதமானதா! கடவுளுக்கும் இதுதானு த்ருப்தி...என் இன்ப ஸ்ரீதரனை நினைத்த இதயத்தில் இன்னுரு மனிதனுக்கு இடங்கொடுப்பதா எனது தர்மம்...தர்மம்.. ஆம்...தர்மம் எது...சுயநலத்திற்காக த்யாகம் செய்வதும் தற் கொலை புரிவதும் தர்மமேயல்ல...எது சிறந்த தர்மம்....பிறருக்காக தான் சர்க்கரையைப்போலும் உப்பைப்போலும், கரைந்து த்யாகம் செய்வதுதான் தர்மம். தனக்காக சுயநலத்திற்காக எதைச்செய் தாலும் அது ஒருபோதும் த்யாகத்திற்குச் சேராது...ஆம்...நான் நினைப்பது முற்றிலும் சுய நலம்...எனது இதய ஆனந்தத்திற்காக மரணத் தறுவாயிலுள்ள ஒரு அரிய சகோதரியின் ஆவலை நிரா கரிப்பது தர்மமாகுமா! அதே சகோதரிக்காக இத்தனை பாடு பட்ட தெல்லாம் இச்சுய நலத்தில் கேவலம் பொசுங்கிவிடுமல்லவா! அவளுடைய ஆத்மசாந்திக்காகவும், என் பெற்றோர்கள் இதயம் களிக்கவும், பரதேசிக் குழந்தைகளின் பாதுகாப்பிற்காகவும் நான் ஏன் இந்த அல்ப த்யாகத்தைச் செய்யக்கூடாது?

சுக்ராச்சாரின் சாபத்தினுல் யௌவனத்தை இழந்து விருத் தாப்பியத்தை யடைந்த யயாதி சக்கரவர்த்தியின் பரிதாபத்தைக் கண்டு அச் சக்கரவர்த்தியின் மகன், தான் அந்த சாபத்தின்படி வ்ருத்ததசையை வாங்கிக்கொண்டு தன்னுடைய வாலிபத்தைத் தனது தந்தைக்குக் கொடுத்து உதவிய த்யாகம் நமது இந்து தர்மத் தில் ஜ்வலிக்கவில்லையா...இந்த யௌவனம்... இந்த அல்ப ஆசை...

இந்த இளமையின் தோற்றங்கள், உணர்ச்சிகள் இன்னும் சிறிது காலத்தில் மறைந்துபோகக்கூடியவைதானே. அதற்கப்புறம் நானும் கிழவி...என் ஸ்ரீதரனும் கிழவன்...ஆம்...அப்போது சுயநலந்தானே முன்னால் நிற்கும்...

வேண்டாம்...வேண்டாம்...இச்சமயத்தில் ஆத்மார்த்தகமான த்யாகாக்கினியில் குளித்துப் பரோபகாரத்தைச் செய்து மற்றவர்களை இன்புறச்செய்து இந்த நன்மையில் என்காலம் முடிந்தால் போதும். இதுவே எனக்குக் கடைசீ முடிவு...நாம் பதில் சொல்லாது எழுந்துவந்ததே என் சகோதரியின் நெஞ்சை அள்ளித்தின்னும் வேதனையிலாழ்த்தியிருக்கும். நாம் இனி இங்கு தாமதம் செய்யாது அவளுடைய இஷ்டப்படி நடப்பதாக வாக்குதத்தம் செய்துவிட்டு கடைசியாக என் மனோகரனை...என் ஜீவாதாரமான ஸ்ரீதரனை ஒருமுறை கண்ணாரக்கண்டு பின் என் அத்திம்பேருக்கே மாலை இடுவேன்...இதுதான் உறுதி"...என்று தீர வைராக்யத்தை திடமாக ஊட்டிக்கொண்டு எழுந்திருக்கும் சமயம் அமிருதவல்லியம்மாள் அங்கு வந்தாள்.

சந்திராவின் கண்கள் கலங்கிக் காணப்பட்டனவேயன்றி முகத்தில் மாறுதலை ஒரு நொடிப்பொழுதில் மாற்றிக்கொண்டு, "என்னம்மா...அக்கா கூப்பிடுகிறார்களா!" என்று தானே வலுவில் கேட்டாள்.

சந்திராவைக் கட்டிக்கொண்டு "கண்ணே! ஆம் கூப்பிடுகிறாள். உன் அக்காவின் வாயிலாகவே விஷயங்களை அறிந்தேன்... அதுவே எனக்கும் பரமசந்தோஷமாகத் தோன்றியது. அவள் புத்தியில்லாது செய்த காரியத்திற்கு தக்க பிராயச்சித்தம் இதுதான். ஒரு குற்றமும் இல்லாத துலாம்பரமான இதயத்துடன் உன்னோடு பேசிய கணவன்மீது படாப்பழியைச் சுமத்திச் சந்தேகித்த விபரீதச் செய்கைக்குப் பலன் உன்னையே அவருக்கும், அவரையே உனக்கும் காணிக்கையாகக் கொடுத்துவிட்டது மிகவும் பொருத்தம். சேகரனைப் போன்ற மனிதன் கிடைப்பதே துர்லபம்" என்று ஏதேதோ பேசிக்கொண்டு போவதை சந்திரா கவனிக்கவேயில்லை. வைராக்யத்துடன்தான் எழுந்தாள்; எனினும் அமிருதவல்லியம்மாளுக்கும் இவ் விஷயம் தெரிந்து அவளும் அதை ஆமோதிக்கும்போது மறுபடியும் சித்த உறுதி குலைந்து ஸ்ரீதரனின் அற்புத பிம்பம் அவள் கண்முன்பு தாண்டவமாடியது.

"அம்மா!...நீங்கள் அக்காவிடம் போங்கள். நான் இதோ முகம் கழுவிக்கொண்டு வருகிறேன். உங்கள் எல்லோருடைய சம்மதத்திற்குமேல் சொல்வதற்கு எனக்கு என்ன இருக்கிறது?... நீங்கள் போங்கள் இதோ வருகிறேன்"...என்று தந்திரமாக அனுப்பிவிட்டாளேயன்றி பயித்தியம் பிடித்த நிலைமையில் அவள் கதி முடிந்ததுபோலாயிற்று.

ஒருபுறம் ஸ்ரீதரன்...ஒருபுறம் சேகரன்...மரணத்தருவாயிலுள்ள பரிதாபப் பதுமையின் படுக்கை ஒருபுறம்...என் கையில் சோதனை மாலையைக் கடவுள் கொடுத்துவிட்டார்...இது யாருடைய கழுத்திற்கு உகந்ததோ...இதை சுயநலத்திற்கு உபயோகிப்பதா! மரணத்தருவாயிலுள்ள மனுஷியின் ஆத்மசாந்திக்கு அர்ப்பணம் செய்து த்யாக சிகரத்திற்குச் சூட்டுவதா...ஐயோ! சோதனையே! சோதனையின் கூற்றே...ஆண்டவனே!...மன உறுதியாவது அளித்து என் அன்பனை அடியோடு மறைத்துவிடமாட்டாயா!... ஏன் இந்த உருவம் என் கண்முன்பு தோன்றவேண்டும்? ஐயோ... ஏதோ சித்திரவதை செய்கின்றதே...ஹா! ஸ்ரீதர்!....ஸ்ரீதர்!...நீ உண்மையில் என்னை நேசிப்பவனாயிருந்தால் உன் ப்ரேமவல்லியின் மனத்தில் வைராக்யத்தை நிலைநாட்டி நீ மறைந்துவிடு....மறைந்துவிடு...ஸ்ரீதர்...ஸ்ரீதர்...உம்...வெறும் உருவெளித் தோற்றந்தானே...அக்கா!...நீ பயப்படாதே. உன்னிஷ்டப்படியே நான் செய்கிறேன். என் தாயின் மரணத்தருவாயில் கொடுத்த வாக்குதத்தத்தை நிறைவேற்றி என்னைக் காத்துவரும் புனிதமூர்த்திகளின் உள்ளம் குளிர நான் நடக்க கடமைப்பட்டவளல்லவா! ஆம்...சந்தேகமின்றி நான் சர்க்கரையாகக்கரைந்து அவர்களின் உள்ளம்களிக்கச்செய்யவேண்டுவதுதான் தர்மம்...ஸ்ரீதர்...இது உனக்கும் சம்மதந்தானே...அதோ பார் என் சகோதரியின் மரணப்படுக்கை... மரணத்தருவாயிலுள்ளவர்களை த்ருப்தி செய்வதைவிட நாம் சுயநல சுகத்தை விரும்புவது சரியில்லை என்பது உனக்குத் தெரியாதா!... ஸ்ரீதர்...இதோ! இன்றே உன்னை நேரில் காணவருகிறேன். என்னை மன்னித்து உன்னுடைய அன்பு நிறைந்த ஆசியைக் கொடுத்து நீயே என்னை என் அத்திம்பேருக்கு தாரைவார்த்துவிடுகிறாயா...ஆம்....நீ மகாஉத்தமன்....சத்தியசீலன்....த்யாகப் பதுமை....தர்மகுணக்குன்று. நீ செய்வாய். கட்டாயம் செய்வாய். இதோ வருகிறேன்... என்று பித்துபிடித்தவள்போல் பிதற்றியவாறு இங்குமங்கும் உலாவினாள். ஒன்றும் தோன்றாத நிலைமையில் தத்தளிக்கும்போது 'சந்திரா!' என்று ஒரு அன்பு நிறைந்த குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்துத் திடுக்கிட்டாள். 'ஹா... அத்திம்பேர்! அத்திம்பேர்!...வந்தீர்களா?... அக்காவைப் பார்த்தீர்களா?'...என்று நாக்குழறியவாறு கேட்டாள்.

"உம்...வந்தேன்...நடைப்பிணம்போல் வந்தேன்...இதயத்தில் உணர்ச்சியின்றி, மனத்தில் தெம்பின்றி உன் கடிதத்திற்குக் கட்டுப்பட்டு என் கடமையை நினைத்துவந்தேன்...என்னை எல்லோரும் சேர்ந்து வதைக்கும் வதை போதாதென்று நீயுமா பங்கிட்டுக் கொள்ளவேண்டும்?...குழந்தாய்!...'உடனே இந்திராவுக்குத் தந்தியடிக்காவிட்டால், சந்திரா இறந்துவிட்டாள் என்கிற தந்தியை நீங்கள் பார்ப்பீர்கள்!" என்ற கொடிய பாணத்தை நீயேன் தொடுத்தாய்? சந்திரா!. உன் கடிதத்திற்கு நான் பயப்படவில்லை. உன்னுடைய மரணத்திற்கே பயப்பட்டேன். உனது பரிசுத்தமும் வைராக்யமும்

பாகவதலக்ஷணம் பரிபூர்ணமாகக் குடிகொண்டுள்ள உனது சீலமும் நான் முற்றுமறிவேனாகையால் சொல்லியபடி எங்கே செய்து விடுகிறாயோ! என்கிற பயத்தினால் ஓடிவந்தேன்...நான் இந்திராவையோ, அந்த மாமிசப் பிண்டங்களையோ பார்க்கக் கனவிலும் விரும்பவில்லை...ஏற்கெனவே அந்தப் பாதகியால் உன்னுடைய வாழ்நாள் துக்கமயமாகி விட்டதோடு உயிரும்போய் விடப் போகிறதே என்கிற பயத்தினால் வந்தேன்...உன்னைப்போன்ற பரிபக்குவமான மனது எனக்கு எள்ளளவும் இல்லை என்பதை நானே ஒப்புக்கொள்கிறேன்" என்று ஏதேதோ மெஷின்போல் பேசிக்கொண்டே போவதைக்கண்ட சந்திராவின் காதில் எதுவும் விழாது குழம்பியது. எனினும் கடவுள் தன் பங்கிலிருந்து இவரை அனுப்பிய வேகத்தில் சந்தோஷப் பூரிப்பால் தன் தமக்கை பிழைத்துக்கொள்வாளோ! என்கிற ஒரு எண்ணம் உண்டாகியது. "அத்திம்பேர்! என் மனது இப்போதே நிம்மதியாயிற்று. வாருங்கள்; பிறகு பேசிக்கொள்ளலாம்...வாருங்கள்...என் சகோதரியிடம் வாருங்கள்" என்று பலவந்தமாக அவனை அழைத்துக்கொண்டு இந்திரா இருக்கும் இடத்திற்கு ஓடினாள். அத்தனை பயங்கரப் புசல் காற்றிற்கு மத்தியிலும் சந்திராவுக்கு ஒரு சிறிது ஆனந்தமும் நம்பிக்கையும் உண்டாகியது.

## 55

"அம்மா! என் சந்திரா இங்கு வரவேயில்லை?....நான் சொல்லியது கோபமா...அம்மா!...என் இந்த மவுனம்?... இப்படிப் பாரு...அவர் அடித்த தந்தி உண்மையே அல்ல...வெறும் விளையாட்டிற்கு யாரோ செய்த வேலை...சந்திராவே செய்திருப்பாளோ...சந்திரா! சந்திரா!"...என்று கூப்பிட்ட சமயம்..."ஆ! இதோ வந்துவிட்டார் அத்திம்பேர்...அக்கா! இதோ உன் ஜீவாதாரம்...அத்திம்பேர்! ஆண்டவன்மீது ஆணையாக நீங்கள் அக்காவிடம் கோபிக்கக்கூடாது. இதுதான் நான் தங்களைக் கேட்கும் வரன். க்ரோதத்தை அடக்கி குணத்தைக் கொள்வதுதான் மனித லக்ஷணம்....என்று கூறியவாறு வந்தாள்.

தூரத்தில்வரும் தன் கணவனைப் பார்த்த இந்திராவுக்கு ஒரே ப்ரமிப்பு, அதிர்ச்சி; சந்தோஷம்...வெட்கம்....துக்கம்...தான் செய்து விட்ட குற்றத்தின் எதிரொலியின் பயங்கரம். எல்லா உணர்ச்சிகளும் ஒன்றுகூடி அவளுக்கு எங்கிருந்தோ பத்து யானைகளின் பலத்தை ஒன்றுசேர்த்துக் கொடுத்தன.

அசைந்து படுக்கக்கூட சக்தியற்றிருந்தவள் சடக்கென் றெழுந்து "என்னை மன்னிப்பீர்களா?...என் குற்றத்தைப்

பொறுப்பீர்களா?...என் மூடமதிக்கு நான் ப்ராயச்சித்தஞ்செய்து விட்டேன்''...என்று கூறிச் சேகரின் காலில் விழுந்து கதறினாள்.

சேகருக்கு உள்ளூர மனது வெறுத்தது திரும்பவே இல்லை. எனினும் மரணத்தறுவாயிலுள்ளவர்களை வதைப்பது தர்மமில்லையாகையால்...'இந்திரா!...நான்மட்டும் மன்னித்தால் போதாது. ஆண்டவன் உன்னை மன்னிக்க வேண்டுகிறேன். நீ யாருக்குப் பெருந் த்ரோகம் நினைத்தாயோ, அதே சந்திரா உன்னுயிரைக் காக்கத் தன்னுயிரை விட்டுவிடுவதாயும் உடனே வரவேண்டும் என்றும் எனக்குக் கடிதம் எழுதியதற்காக நான் உடனே வந்தேன்...இதையும் உனது விபரீத மதியில் குற்றமாக நினைத்தாலும் நினைத்து பின்னும் சதி செய்யலாம்''...என்று கடுமையாகவே கூறியபடி அவளை குழந்தையைப்போல் தூக்கிப் படுக்கையில் கிடத்தினான்.

அதிர்ச்சியால் இந்திராவுக்குச் சற்று மூர்ச்சையாக இருந்தது தெளிந்ததும் "ஹா...சந்திராவா உங்களை வரவழைத்தாள்! சந்திரா... சந்திரா...நாதா...நான் உங்களுக்கு நினைத்த த்ரோகத்திற்குப் பலன் அனுபவித்துவிட்டேன். தாயில்லாக் குழந்தையின் வதை என் குழந்தைகளைத் தாயில்லாக் குழந்தைகளாக்கிவிட்டன...உங்கள் திருவடிக்கு நான்செய்த பரம பாதகத்திற்கு விமோசனம் என்பது கிடையாது. அதை என்னுள்ளமறியும். எந்த பரிசுத்த ஆத்மாக்களை நான் அழுக்கு நிறைந்ததாக எண்ணினேனோ அதே ஆத்மாக்களை பகவான் காப்பாற்றி ஜோடி சேர்ப்பானாகை...இதோ...என்னுயிர் வெகு சீக்கிரம் போய்விடும். அதற்குள் என் பாதகத்திற்குத் தக்க ப்ராயச்சித்தமாக உங்கள் கரத்தால் என் சந்திராவின் கரத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்...என் சந்திராவை நீங்கள் மணந்து நம் கண்மணிகளையும் என் பெற்றோர்களையும் காப்பாற்றுங்கள். எந்த சந்திராவிடம் நான் உங்கள்மீது சந்தேகப்பட்டேனோ, அந்த சந்திராவை மனப்பூர்வமாக உங்களுக்கு அளிக்கின்றேன்...'' என்று திக்கித் திணறிக் கூறினாள்.

இந்த வார்த்தை சேகரனை ஒரு தூக்குதூக்கிப் போட்டுக் கலக்கி "என்ன!...சந்திராவை எனக்குக் கொடுப்பதா!...சந்திராவையா!...இதென்ன பேத்தல்!" என்று தடுமாற்றத்துடன் கூறி இந்திராவையும் சந்திராவையும் மாறிமாறிப் பார்த்தான்.

அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உலகமே சுழல்வதாக ஒரு பெரும் பயங்கரம் உண்டாகி வதைக்கின்றது. மனது தத்தளிக்கின்றது. பதில் பேச நா எழவில்லை...இந்த நிலையைக் கண்ட சந்திராவின் உள்ளம் எப்படித்தான் துடிக்கும்? உண்மையில் அவள் உள்ளம் விரும்புவது தனது மரணத்தையன்றி வேறில்லை. பூமி வெடித்துத் தன்னை விழுங்கிவிடக்கூடாதா! தன் தாய் தன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடக்கூடாதா!''என்று நினைத்துத்துடிக்கிறாள்.

இந்திராவின் பரிதாபமும் சேகரின் துடிதுடிப்பும் இவளுக்குத் தெரியாமலில்லை. இந்திராபரிதாபமும், மரணத்தின் பயங்கரமும்கூடி

சந்திராவைப் பார்த்தாள். அவள் தன் மனப்போராட்டத்தை வெகு ப்ரயாசைப்பட்டு அடக்கிக்கொண்டு,முகத்தில்ஒருஅசட்டுச்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "ஆம்; ஆம்... அத்திம்பேரே! அக்காவின் திருவுள்ளம், மரணத்தறுவாயின் மகத்தான விருப்பம் இதுதான். என்னை ஏற்றுக்கொண்டு அக்காவுக்கு வாக்குதத்தம் செய்யுங்கள்... ஏன் தியக்கம்?...ஐயோ... அக்கா ஏதோமாதிரி பார்க்கிறளே... அத்திம்பேர்! அவள் உயிர் போகிறதா...அக்கா! அக்கா...உன் வாக்கை ஆண்டவன் நிறைவேற்றுவான்" என்று கதறினள்.

சேகருக்கு இன்னது செய்கிறதென்று கூறமுடியவில்லை... இந்திராவைத் தூக்கித் தன் மடியில் கிடத்திக்கொண்டான்... "இந்திரா!...இந்திரா....இதோ பார். என்னுடைய பவித்திரமான ப்ரேமையை அறியாத நீதான் என்மீது சந்தேகித்தாய். என்னை வெறுத்தாய். என்னிதயத்தைப் புண்ணுகச் செய்தாய்...ஆனுல்... ஆனுல்...நான் உன்னைப் புண்படச் செய்யவில்லை. உன்னிதயத்தை அமிருதமயமாகச் செய்யவே காத்திருக்கிறேன். உன் குழந்தை களைப்பற்றிக் கவலைப்படாதே. என்னுயுள் உள்ளவரையில் அவர்களை விட்டுப் பிரியமாட்டேன். எங்கே! உன் சந்தோஷத்தைத் தெரிவி... விருப்பத்தைத் தெரிவி"...என்று கண்ணீர் பெருகக் கூறினுன்.

இந்திராவின் முகம் மலர்ந்தது..."நான்செய்த பாவத்திற்குப் பரிகாரமே இல்லை. எனினும் என் சந்திராவை உங்களுக்கு நான் தத்தம் செய்கிறேன்...என்னைவிட்டு இருவரும் அகலவேகூடாது... சந்திரா...சந்திரா...இருவரும் சேர்ந்தாற்போல் என்னை மன்னித் தேன் என்று கூறுங்கள்...எங்கே?...ஒருதரம் அந்த இன்பநாதம் என் செவியில் விழட்டும்...எங்கே?"...என்று கூறியவாறு தன் கைகளால் அந்த இருவருடைய கைகளையும் பிடித்துத் தன் மார் போடு அணைத்துக்கொண்டாள். அதுவே அவளுக்குப் பேரானந்த மாகத் தோன்றியது.

மேலும் ஒருமாத காலம் உருண்டு ஓடிவிட்டது. தற்சமயம் கற்பனைக் கோட்டையூரைவிட்டு அமிருதபவனத்திற்கே குடி வந்து விட்டார்கள். இந்திராவின் ஈமக்கிரியைகள் முடிந்தன. சேகர் மறுபடியும் ஊருக்குப்போகவில்லை. லீவு போட்டுவிட்டு சதா தன் குழந்தைகளுடனிருந்து களிப்பதிலீடுபட்டான்.

ஸாரநாதனின் ஆசைக் கோட்டை உடைந்ததால் அதற்குப் பிறகு அவர்கள் இங்கு வருவதையே நிறுத்திக்கொண்டார்கள். சந்திராவின் கதிதான் கேவலமாகிவிட்டது. இந்திராவுக்குப் பின் இவளும் கிளம்பிவிடுவாளோ! என்று அமிருதவல்லியம்மாளே நடுங் கும்படியான மெலிவும் சோர்வும் அவளை முற்றிலும் நோயாளி போலாக்கிவிட்டன. ஸ்ரீதர்...ஸ்ரீதர்...என்கிற திவ்ய நாமஸ் மரணையை எத்தனைக் கெத்தனை மறக்க முயற்சிக்கின்றளோ, அத் தனைக்கத்தனை அந்த நினைவே, அந்த சுந்தரஸ்வரூபமே...அந்த இனிய நாதம் போன்ற குரலே...இவளைச் சுற்றிச்சுற்றி வதைக்கவாரம்

பித்தது. முகூர்த்தம் வைத்தபிறகுதான் அவளுடைய ஏக்கமும் துக்கமும் உள்ளுக்குள்ளேயே எரிக்கவாரம்பித்தன. அன்று வழியில் ஸ்ரீதரனைப் பார்த்தபிறகு இதுவரையில் அவனுடைய தகவல் எதுவுமே தெரியாததால் எங்கு சென்று பார்க்கமுடியும்? எப்படித் தன் கடைசீ வந்தனத்தைச் சமர்ப்பிக்கமுடியும் என்று இராப்பகல் எண்ணி ஏங்கினள்.

தனிமையில் தான் அவனுடைய ஆபீஸிலேயே போய் பார்க்கலாமா என்றும் எண்ணினள். ஆனல் அது மற்றவர்களுக்குத் தெரிந்தால் இத்தனைநாள் இவ்வளவு பொறுமையுடன் மாசில்லாத நிலைமையில் நடந்துகொண்டதெல்லாம் வீணுகிவிடுமே! வீண் அபவாதம்தானே வந்து சேரும்...ஆம்...வீண் அபவாதம், வீண் சந்தேகம்...வீண் வார்த்தைக்கு இனி ஏன் இடந் தரவேண்டும்? வேண்டாம்...ஒருவிதமான ஆசையும்வேண்டாம்...என் வரையில் எல்லாம் நிராசையாகவே முடியட்டும். துர்ப்பாக்யப் பிண்டமாகிய என்னைப் பார்ப்பதால் அவருக்கு இன்னும் ஆபத்து அதிகமேயன்றி மனக்கொதிப்பு அதிகமேயன்றி மனச்சாந்தி ஏது? இதுதான் என் தலைவிதி. மனமே! பதருதே...இனி இந்த ஆசைக்கு இடங்கொடுக்காதே" என்று கண்ணீர்வழிய உட்கார்ந்திருக்கையில் சேகர் கையில் ஆண் குழந்தையுடன் அங்கு வந்து, 'சந்திரா! நீயே இப்படி சதா அழுதுகொண்டிருந்தால் உன் தாயாரைத் தேற்றுவார் யார்?... சந்திரா...இதோ பாரு...நாம் சற்று வெளியில் போய் வரலாம் வருகிருயா ?" என்றான்.

சந்திராவுக்குத் திடுக்கிட்டது. மனது குழம்பித் தவிக்கின்றது. "அத்திம்பேர்! என்னை மன்னிக்கவேணும். எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. மனது தவிக்கும் தவிப்பை என்னல் சமாதானம் செய்யமுடியாது தத்தளிக்கின்றேன். என் சகோதரிக்கு நேர்ந்த இந்த கதி எனக்கு நேர்ந்திருக்குமாயின் நான் எத்தனை சந்தோஷமடைந்திருப்பேன். எல்லாம் ஈசனின் சோதனை" என்று கண்ணீர் விட்டபொழுது சேகர் குழநதையைக் கீழே விட்டுவிட்டு "சந்திரா!... புலம்பாதேம்மா! இப்படி உட்காரு"என்று அன்பொழுகக்கூறினன்.

சந்திராவுக்கு தர்மசங்கடமாகிவிட்டது. குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு ஒரு சோபாவில் உட்கார்ந்தாள். முகத்தில் தெம்பில்லை. இதயத்தில் நிம்மதியில்லை. சேகரனைப் பார்க்கப்பார்க்க அவள் கண்களுக்கு ஸ்ரீதரனின் உருவமாகவே தோன்றுவதால் தாங்கவியலாத சங்கடம் செய்து வதைக்கிறது. "அத்திம்பேர்! என்னை சற்று மன்னித்து தனிமையில் விட்டுச் செல்லுங்கள். என் மனது ஏதோ தவிக்கின்றது. நான் மௌனமாய்த் தனிமை வேண்டுகிறேன். கோபிக்கக்கூடாது" என்று கெஞ்சுவதுபோல் கேட்கும்போது கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிவிட்டது.

சேகர் உடனே எழுந்து "சந்திரா! உன் விருப்பத்திற்கு மாருக நான் நடக்கமாட்டேன். இதோ குழந்தையைக்கூட எடுத்துக்

கொண்டு போகிறேன். நீ தனிமையில் சந்தோஷமாயிரு'' என்று கூறியவாறு போய்விட்டான்.

தாமரையிலை நீர்த்துளிபோல் சந்திரா தத்தளித்தவாறு இங்கு மங்கும் உலாவினள். பொழுதுபோக்கிற்காக ரேடியோவைத் திறந்து வைத்தாள். அற்புதமான வீணை கானம் ஒலித்துக்கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அதுவும் நின்றுவிட்டது. "இது வரையில் ஸ்ரீமதி ஸரஸ்வதி தேவி வீணை வாசித்துப் பாடினார்கள். அடுத்தது ஸ்ரீமான் ஸ்ரீதரன் அவர்கள் தாமே எழுதித் தாமே தயாரித்துத் தாமே பிரதான பாகமேந்தி நடிக்கும், ப்ரேமையின் ஜ்வாலை என்கிற நாடகம் ஆரம்பமாகும்.'' என்கிற வார்த்தையைக் கேட்டதும் சந்திராவை ஒரு குலுக்குக் குலுக்கியது. "யாரு... ஸ்ரீதரனா...என் ஸ்ரீதரனா....சேச்சே!...ஸ்ரீதரன் என்கிற பெயர் உலகத்தில் எத்தனை பேர்களுக்கு இருக்காது....ஐயோ! என் அன்பராக இருக்கக்கூடாதா! அந்த அமிருத த்வனியையாவது கேட்டு இன்புற்று மகிழ்வேனே!'' என்று ஒருக்ஷண நேரம் நினைப்பதற்குள்... "ஆம்...என் கண்மணியாக இருக்கக்கூடாதா? ஏன் இருக்கக் கூடாது...என்னுருயிர் இந்துமதிதானே...இந்து...இந்துமதீ!''என்று ரேடியோவில் ஒலிக்கும் குரலைக் கேட்ட சந்திரா அப்படியே திகைப்பூண்டை மிதித்தவள்போல் "ஹா...என் ஸ்ரீதரனின் குரலல்லவா...என் அன்பரின் இனிய நாதமல்லவா! ஆம்....ஆம்...சந்தேகமில்லாமல் அவர்தான். நான் கதறுவதுபோலவே அவரும் கதறுகிறாரே...இதென்ன நாடகமா! ஸ்வானுபவமா!....என்ன ஆச்சரியம்!' என்று தனக்குள் பிரமிப்பும் திகைப்பும் களிப்பும் ஒருங்கே அடையப்பட்டவளாய் ரேடியோவின் பக்கத்திலேயே உட்கார்ந்தாள்.

ரேடியோவில் நடக்கும் நாடகம் முற்றிலும் காதல் நாடகம். ஸ்ரீதரனின் புலம்பலும் கதறலும் விம்மலும் உண்மைச் சித்திரமாகத் தன் பொருட்டே கூறுவதாகச் சந்திராவின் மனத்தில் படுகிறதேயன்றி நாடகமாகத் தோன்றவில்லை. ப்ரேமையின் ஜ்வாலையில்கட்டுப் பட்டுள்ள கதாநாயகன் துடிக்கின்றான். பிரிவாற்றாத் துயரக்கடலில் தத்தளிக்கின்றான். கதையின் இறுதி பாகத்தில் ப்ரேமையின் வெற்றிக்குப் பதில் தோல்வியைக் கண்ட கதாநாயகன் மனமுடைந்து "இந்துமதி! உன்னை அடையவே நான் இந்தப் பாழும் உயிரைச் சுமந்தேன். உனக்காகவே சகல துன்பங்களையும் அடைந்தேன். உன் ப்ரேமைக் கேணியில் இன்பமாகக் கொந்தளிக்கப் பேராவல் கொண்ட என் மனக்கோட்டை இடிந்தது. கட்டடம் பொடிசூரணமாகியது. இனி எனக்கு இந்த உயிர் வாழ்க்கை எதற்கு? இதோ நீ சென்ற இடத்திற்கு நானும் வருகிறேன்...ஓ... காலதேவனே! இதோ...என்னுயிரையும் பலிகொள்ளு. கொண்டு போ...சந்தோஷமாகக்கொண்டு, உன் கொடூரமான பசி ஆறட்டும். தணியட்டும்...ஆசை தீரட்டும்''...என்று ஆவேசமும் துக்கமும் த்வனிக்கக் கூறியபடியே கத்தியால் குத்திக்கொள்ளுவதுபோல்

ஓசையும் கேட்டது. ஹா...ஹா...என்ற இறந்துபோகும் சப்தமும் கேட்டது. ஐயோ! ஐயோ!" என்று ஒரு பெருங் கூச்சல் கேட்டது.

அவ்வளவுதான். சந்திராவுக்கு இது ரேடியோவில் கேட்கும் ஒலி என்பதும், தன்னுருயிர் ஸ்ரீதரன் நீடிக்கிருன் என்பதும் அடியோடு மறந்துபோய் "ஹா!...ஐயோ....ஸ்ரீதர்! ஸ்ரீதர்! குத்திக் கொள்ளாதே... தற்கொலை செய்துகொண்டு சாகாதே...நான் இதோ இருக்கிறேன்...ஸ்ரீதர்...ஸ்ரீதர்...ஸ்ரீதர்...என்னை சோதிக்காதே" என்று பெரிதாகக் கத்திக்கொண்டு சோகத்தின் மிகுதியால் மூர்ச்சையாகி ரேடியோவின் பக்கத்திலேயே தடாரென்று விழுந்துவிட்டாள். அவள் உடலில் உயிர் இருக்கிறதா! இல்லையா! என்கிற சந்தேகமே உண்டாகியது.

---

## 56

"இதென்ன...நான் காண்பது கனவா...கனவுதானு...அப்படியாயின்...ஹா...என்னப்பன் ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவின் தரிசனமும் கனவா.....இக்கோயிலும் கனவா.....கிருஷ்ணு...கிருஷ்ணு!...உன் சவுந்தர்ய பிம்பம் நிஜமல்லவா...அது நிஜமாயின்...என் இன்ப ஸ்ரீதர்...ஸ்ரீதர்...இது நிஜமா... ஆஹா ஆஹா!.... இந்தக் கனவு என்னுயிருள்ளமட்டும் நீடித்திருக்கக்கூடாதா... கனவு உலகிலாவது நான் பேரானந்தமடைந்து சாகக்கூடாதா... இதென்ன என்மீது கண்ணீர் சொட்டுகிறது?...நான் எங்கிருக்கிறேன். படுக்கையிலா...இல்லையே! ஸ்ரீதர்....என் ஜீவாதாரமே! உன் மடியிலா நானிருக்கிறேன்...இதுவும் கனவுதானே!"...என்று ஒரே குழப்பமும் தடுமாற்றமுமடைந்து தத்தளித்தவாறு கூறும் சந்திராவின் பரிதாபத்தை யார்தான் கண்டு சகிக்கமுடியும்?

"குழந்தாய்....என்னருமைக்....குழந்தாய்....நீ காண்பது முற்றும் நினைவில் ஆண்டவன் பாத சாக்ஷியாக அவன் சந்நிதானத்தில் நிகழும் நிகழ்ச்சிகளேயாகும். நீ உன்னுடைய ப்ராண காந்தனின் மடியில்தான் படுத்திருக்கிருய். வீண் கவலை இனி வேண்டாம்...உன்னுடைய கோரிக்கையை பகவான் ஈடேற்றிவிட்டார்...உன் குரலைக் காட்டு ஸ்ரீதர்!...என் இந்த மவுனம்? என்று சேகர் சொல்லி முடிப்பதற்குள் கூறத் திறமற்ற அபாரமான உணர்ச்சியுடன் கண்ணீர் பெருகும் ஸ்ரீதரன், கம்மிய குரலில்..."சந்திரா!... இதோ பார்....அன்பே.....என்னுருயிரே... நான்தான் ஸ்ரீதர்...இன்னும் உனக்குத் தெரியவில்லை?"...என்று கூறியபடியே அவளுடைய கன்னத்தைத் தடவி, தலையைக் கோதிக் கண்ணீரைத் துடைத்தான்.

வாடி வதங்கிக் கருகிப்போகும் தறுவாயிலுள்ள பயிர்களுக்குத் திடீரென்று மழைபெய்ததுபோல் இந்த குரல் கேட்டதும், சந்திரா

வின் உள்ளம் மகிழ்ச்சியால் துளிர்த்து ஒரு துள்ளு துள்ளச் செய்தது. "ஸ்ரீதர்!...ஸ்ரீதர்!"....என்று அவன் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு சில விநாடிகள் மெய்மறந்தாள்.

கரைபுரண்ட ஆனந்தத்தில் அவன் சந்திராவை ஆச்வாசப் படுத்தி 'கண்ணே! என் மனம் உடைந்த வேகத்தில் அன்றே சண்டைக்குப் போய்விடவும் கிளம்பிவிட்டேன். ஆனால் என்னுடைய ஆவல் எதுவுமே நிறைவேருதவாறு நான் வரம் வாங்கிக்கொண்டு வந்திருப்பதால் எனக்கென்று அளிக்கப்பட்ட என் ஊமை மனைவியை பகவான் திடீரென்று இதய நோயால் தன்னடி சேர்த்துக்கொண்டு என்னை இங்கு நொண்டிக்கும், என் தந்தைக்கும் பணிசெய்ய நிறுத்திவிட்டார்.

'ஹா! என்ன!..அந்த உத்தமி இறந்துவிட்டாளா...ஐயோ! இதுவும் கனவா நினைவா...ஸ்ரீதர்...என்னிதய அரசே...இக் கனவிலிருந்து என்னை விழிக்கச்செய்யாது ஆண்டவன் அருள் புரிவானு...

"கண்மணீ!...கனவுதான் நினைவு; நினைவுதான் கனவு. உன்னை ஒருதரம் என் கண்ணாரக் கண்டுகளிக்க நான் படும்பாடு சொல்ல முடியாது. என்னிதயத்தில் பொங்கிவழிந்த ஸ்வானுபூதியே எனது ரேடியோ நாடகமாகும். அவ்வாறு என் நெஞ்சிலுள்ள பாரத்தை சிறிது இறக்கிக் கதறினுல்தான் என்னிதயம் பிளக்காமலிருக்கும் போல் தோன்றியதால் அதையும் நடத்தினேன். ஆனல்....பகவான் எனக்கு திடீரென்று இத்தனை சடுதியில் அந் நிலயத்திலேயே தனது வாத்ஸல்யத்தைக் காட்டி ஆதரிப்பாரென்று நான் கனவுகூடக் காணவில்லை. என் கண்மணீ! எனக்குள்ள இந்த நிலையில் வெட்கங் கூடத்தெரியவில்லை...சந்திரா! ஆருயிரே....இன்னமும் பிரமிப்பா!...

"கனவிலா இத்தனையும் நடக்கிறது. இப்போது நான் கேட்பதெல்லாம் கனவா! கனவு...கனவு...அத்புதக் கனவு...ஆனந்தக் கனவு...இன்பக் கனவு...ஈடிலாக்கனவு. அப்பாடா...என் துரையே! என் கனவில் நான் எத்தனை பிதற்றினுலும்...ஸ்ரீதர்...ஸ்ரீதர்...என்று மிரளுகிருள். நிலைதடுமாற்றத்தில் அவன் சொல்லியது ஒன்றுமே தெளிவாக விளங்கவில்லை. ப்ரமிப்பால் நாற்புறமும் மறுபடியும் சுற்றிப் பார்த்தாள்...

அடுத்த க்ஷணமே தீயை மிதித்தவள்போல் சடக்கென்று ஸ்ரீதரன் மடியிலிருந்து துள்ளி எழுந்து "ஹா!...இதென்னக் கூத்து....இதென்ன சோதனை...நான்...நான்...எனது சகோதரிக்குச் செய்த வாக்குதத்தத்தை அடியோடு மறந்துபோய் மகத்தான பாதகத்தைச் செய்துவிட்டேனே! ஐயோ!...ஸ்ரீதர்.... நீங்கள் எப்படி இங்குவந்தீர்கள்?...நீங்கள் தயவுசெய்து போய் விடுங்கள். நான் உங்கள் சொத்தல்ல...என் சகோதரியால் என் அத்திம்பேருக்கு தத்தம் செய்யப்பட்ட சொத்து....இந்தச் சோதனையை என்னல் சகிக்க முடியவில்லையே... ஹா! கிருஷ்ணு! இதென்ன விளையாட்டு! மரணத்தறுவாயில் கொடுத்த வாக்கை

மறக்கச் செய்வதா உனது மகிமை!''...என்று கிருஷ்ணனின் பாதத் தடியில் விழுந்து கதறினள்.

''அம்மா...குழந்தாய்!...அன்றும், இன்றும், என்றும் உன்னை நான் எனது உடன்பிறந்த இளைய சகோதரியாகவே எண்ணிய தால் குழந்தாய் என்று வாய்நிறைந்து அழைப்பதில் அளப்பரிய இன்பத்தை அடைகிறேன்...அதை நான் என்றும் இழக்கமாட் டேன். அந்தத் தனியின்பம் எனக்கே உரியது. எனக்கே சொந்தம். குழந்தாய்! நீ வாக்குதத்தம் கொடுக்கவில்லை. உன் சகோதரிதான் எனக்கு உன்னை தத்தம்செய்து உன்னை என் பொருளாகச் செய்து விட்டாள். எனக்குச் சொந்தமான பொருளை நான் யாருக்கும் பகவதர்ப்பணமாகக் கொடுக்கும் உரிமை உண்டு. எனது உரிமைப் பொருளாகிய உன்னை நான் என்னுடைய பரிபூர்ண இதயத்துடன், உனது தாய் தந்தையரின் இதய பூர்வமான சம்மதமும் ஆசியும் பெற்று, இக் கண்ணன் கழலடியருகில் இந்த உத்தமனுக்கு தத்தம் செய்துவிட்டேன். உனது ரகஸியம் இதுகாறும் ஒரு வருக்கும் தெரியாதெனினும் அன்று நீ ''என் அன்பான ஸ்ரீகா னுக்கு'' என்று எழுதிய கடிதத்தின் முதலடியைப் பார்த்த நான் மட்டும் ஒரு சிறிது அறிந்திருந்தேன்.

என் மனமுடைந்த வேகத்தில் நான் சென்றுவிட்ட பிறகு இந்த மனிதர் யார் என்பதே தெரியாதிருந்தது. உன் சகோதரி கேட்டாளே யன்றி நான் வாய்திறந்தேனா? நீ அறிந்திருக்கலாம். நானும் குழம்பிக்கொண்டுதானிருந்தேன். நீ ரேடியோ நாடகம் கேட்பதை முற்றும் நான் பார்த்துக்கொண்டிருந்தேன். ரேடியோ நாடகம் என்பதை மறந்து ''ஸ்ரீதர்...ஸ்ரீதர்!...என்று நீ கதறி மூர்ச்சையானதையும் பார்த்து, உன் தாயாருக்குக் காட்டிப் பின் உடனே ரேடியோ நிலையத்திற்கு ஓடி இவரை அங்குள்ளவர்களின் உதவியால் கண்டுபிடித்து விஷயங்களைக் கூறி அழைத்துவந்தேன்.

''ஸ்ரீதர் இறந்துவிட்டாரா! ஐயோ! ஸ்ரீதர்! நீயா இறந்து விட்டாய்'' என்று நீ வாய் பிதற்றுவதைக் கண்டு எங்களால் சகிக் காது உன் பிதாவின் மனமே உருகிவிட்டது. இதே ஸ்ரீதர்தான் இந்த வீட்டுக்காரர் என்பதை யறிந்ததும் உன் பிதாவே ஸ்ரீதருடன் பேசிசகலவிஷயத்தையும் அறிந்துகொண்டார். 'ஒரு பெண்ணைத்தான் இழந்துவிட்டோம். இவளையாவது இழக்காது காப்பதற்கு இதுதான் வைத்தியம்' என்று உன் பிதாவே தேறி ஸ்ரீதரனை அழைத்துவந்து உன்னிடம் சேர்த்தார். போதுமா விஷயம். வீட்டு விஷயமாக நடந்த சகல கல்மஷமும் ஸ்ரீதரனின் விரோதிகளால்தான் என்பதும் அவராலேயே விளங்கியது. எப்படியாவது நீ பிழைத்தால் போதும் என்று உன் பிதா கிருஷ்ண பரமாத்மாவின் திருவடிகளில் இத்தனை நேரம் கத்தினர்.

இனி உனக்கு யாதொரு சந்தேகமோ, குழப்பமோ வேண்டாம்...குழந்தாய்! உன்னை நான் அவருக்கு தத்தம் செய்து

விட்டதால் இனி நீ அவருடைய பொருள். சொத்துக்காரரிடம் சொத்து சேரவிருக்கையில் சாரநாதன் எப்படி அடையமுடியும்?''... என்று பெரிய பிரஸங்கம் செய்தான்.

தந்தையிடம் ஓடிவந்து "அப்பா!"...என்று கட்டிக்கொண்டாள். நரஸிம்மனுக்கு வாய் பேசவே முடியாது திணறுகிறது. "கண்மணீ! இனியாவது நீ சுகமாக இருந்த என் பாவிக் கண்ணால் கண்டால்போதும். நான் மனப்பூர்வமாக இந்த சம்மந்தத்தை நேசிக்கிறேன்" என்றார்.

அமிருதவல்லியம்மாள் ஆனந்தக் கண்ணீருடன் மகளைத் தடவிக்கொடுத்து "கண்ணே! இதைவிட நித்யமங்கள வைபவம் நிறைந்த பேரானந்தம் வேறு எங்களுக்கு என்னவேணும்? எங்கே... அந்த சௌந்தர்ய மூர்த்தியின் கரம் பற்றி நின்று காக்ஷியளி...என் கண்மணீ! இந்தா... அப்பனே! இப்படிவா" என்று இருவரையும் தானே இழுத்து அவர்கள் கைகளைச் சேர்த்துப் பிடித்து நிறுத்தித் தன் கண்ணில் ஒத்திக்கொண்டு பேரானந்தக் கண்ணீர் உதிர்த்தாள். அங்குள்ள ஏனையோருடைய கண்களும் ஆனந்த மாரி பொழிந்தன. அப்படியப்படியே எல்லோரும் நகர்ந்தார்கள்.

"ஹா!...ஸ்ரீ கிருஷ்ணா!...உன் கருணையை என்னென்பேன்...உன் வாத்ஸல்ய குணத்தை எப்படித்தான் புகழ்வேன்? என் இன்ப துரையே...என்னாவிக்கமுதே...என் ஜீவதாரமே...கண்மணீ...இன்பவெள்ளத்தில் மௌனம் குடிகொண்டது. ஈருடலும் ஒருயிருமாக ஐக்ய நிலையை அடைந்த அற்புதக் காக்ஷியைக்கண்ட அந்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் சிலைகூட ஆனந்தத்தாண்டவமாடி மந்தகாஸம் செய்து "சர்வமங்களானிபவந்து; தீர்க்க ஸுமங்கலீபவ" என்று வாழ்த்தியதுபோல் முகத்தில் தேஜஸ் நிறைந்தது. கண்களில் வாத்ஸல்யம் ஜாஜ்வல்யமாக பிரகாசித்தது. இந்த விலையிலா ஆசியைப் பெறுவதைவிட வேறு நித்யமங்கள வைபவம் என்ன இருக்கிறது?

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. —திருக்குறள்

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

வாத்ஸல்யம்
முற்றிற்று.

183026.
600 008

"ஜகன்மோகினி" பிரஸ், வெங்கடாபுரம். (எகசரு)

## சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார்

"ஆண்டுமலர் பெரும்பாகம் இங்கு மங்குமாகப் படித்து மகிழ்ச்சியடைந்தேன். மிகவும் நன்ருக மலர்ந்திருக்கிறது. மிகவும் சிரமப்பட்டு வேலைமுடித்த காரியம். நீங்கள் பெருமைப்படத் தகுந்தவாறே இருக்கிறது......படங்கள் மற்ற பத்திரிகைகளுக்கு சமானமாகவே அமைந்திருப்பது விசேஷம்." (2-1-1943)

## அபினவ ஸரஸ்வதி ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்வாமி

"......ஜகன்மோகினி 20-வது ஆண்டு மலரைக் கண்ணுரக்கண்டு கருத்திற் களிகொண்டேன். இஃது வைத்த மாநிதியே!......" (4-1-1943)

## சுவாமி சுத்தானந்த பாரதியார்

நமது வை. மு. ஸ்ரீக்கு 18-1-1943 எழுதிய கடிதம்:—"கண்ணபிரான் அருளுக!...வைத்தமாநிதி முடும்பைக் குடும்பமே, ஆழ்வார்கள் தந்த பக்தி ஸம்பத்தும், தமிழ்ச் செல்வமும் சேமித்துவைத்த மாநிதிச்சாலை போன்றது. அக்குடும்பத்தில் உதித்ததே உங்களுக்கு ஒரு தனிப்பெருமை. கதையரசி ஸ்ரீமதி வை. மு. கோதையம்மாள் மாநிதிக் குடும்பத்தின் கற்பகமலர். அவர்கள் உள்ளத்தில் கிளர்ந்தெழும் அனுபவங்களும், உலகக் காட்சிகளும் கதையருவியாக ஓடிவருகின்றன. இயல்பான எளிய இனியநடை, இன்னும் இன்னும் என்று படிக்கத் தூண்டும் காட்சிப்படலம், நவரஸபாவனை, நயமுறக்கூடிய ரஸனை,—ஆகியவை சேர்ந்த அம்மாள் நாவல்கள் அனுபவக் களஞ்சியமாயிருக்கின்றன. அவை மனித உள்ளத்திற்கு ஒரு ஆறுதலளித்து "பகவான் இருக்கிருர்! பயப்படாதே" என்று உறுதி கூறுகின்றன. இக்காலம் நாத்திகத்திமிரே இலக்கியத்திலும் பரவி, கலையின் தெய்வத்தன்மையைக் கெடுத்துவருகின்றது. ஸ்ரீமதி கோதையம்மாள் நாவல்களை ஒவ்வொரு வீட்டிலும் ஆண் பெண் அடங்கலும் படித்தால், நாட்டைப்பிடித்த நாத்திக வாடை ஒழியும். கடவுளைக் காட்டுவதே கலை. மற்றதெல்லாம் வெறுங்களியாட்டமே யாகும்... அம்மையார் நாவல்களில் பக்திரஸம் ததும்புவதுகண்டு மிக்க மகிழ்ச்சியெய்துகிறேன்... அவர்கள் நடத்தும் ஜகன்மோகினியில் அந்த அன்பு நிரம்பிய உள்ளமே வரிக்கு வரி பேசுகிறது... ஜகன்மோகினி ஆண்டுமலர் அற்புதமாயிருக்கிறது. ஒரு சிறு கிராமத்திலிருந்துகொண்டு, இவ்வளவு அழகான மலரைத் தாங்கள் வெளியிட்டது ஆச்சரியமே. ஜப்பான் குண்டு வருமென்று பயந்து பலர் கிராமங்களுக்கு ஓடினர்... அதனால் ஜனங்களின் வாழ்வையே குலைக்கலாம் என்று எதிரிகள் நினைத்தனர். ஜகன்மோகினி அந்த நினைப்பை வீணாக்கிவிட்டது. 'எந்த இடத்திலிருந்தாலும் இறைவன் வெற்றிதருவான்; எங்கள் பணியை அவனுக்கே அர்ப்பணமாகச் செய்வோம்'......என்பதை ஜகன்மோகினி விளக்கிவிட்டது......ஸ்ரீமதி கோதைநாயகியம்மாள் இன்னும், பெண்களின் உள்ளத்தையும் வாழ்வையும் உலகிற்குப் பளிச்சென விளக்கி அரிய நாவல்கள் எழுதி அருட்பணிபுரிக"...

## டாக்டர் தி. செ. சௌ. ராஜன்

"...காகிதம் கிடைப்பது குதிரைக் கொம்பாகயிருக்கப்பட்ட இந்த காலத்தில் தாங்கள் "வைர விழா" சஞ்சிகை வெளியிட்டிருப்பதே ஆச்சரியப்படவேண்டிய விஷயம். மேலும் அதிலடங்கிய சித்திரப்படங்கள் அருமை. அறிஞர்கள் போற்றத் தகுந்ததே. தமிழ்ச்சுவை அறிந்த பல எழுத்தாளர்களின் வியாசங்களும் கட்டுரைகளும் படிப்பதற்கும், அறிந்து கொள்வதற்கும் தகுந்த யோக்யதையுள்ளதாகயிருக்கின்றன. எழுதப்பட்டிருக்கும் விஷயங்களும் பலதரப்பட்டனவாகவும், அழகு பொருந்தியனவாயுமிருக்கின்றன" (20-1-1943. திருவேங்கிமலை.)

இதுபோல் வரும் ஆசிக் கடிதங்களும் பாராட்டுகளும் எமக்கு அதிக உத்ஸாகமளிக்கின்றனவென்று சொல்லவும் வேண்டுமோ? எல்லாம் அவன் அருள். அவன் திட்டப்படியே யாவும் நடக்கின்றன.

உங்கள் ஆதரவையும், அன்பையும் என்றும் மறவாத வை. மு. கோ.



அதன் வாசனையிலிருந்தே

அதன் பெயரைச் சொல்லட்டுமா?

அதுதான்

நரஸூஸ்

காபி

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி

பாக்டரிகள் :—

சென்னை, சேலம்.


PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMALKOIL, B. O.